பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | சித்திரை 26 புதன்கிழமை 09.05.2018 | கதிர் 184


## ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம்

ரயில்வே ஊழியர்கள் நேற்று நள்ளிரவு முதல் ஆரம்பிக்க இருந்த தமது வேலைநிறுத்தப் போராட்டத்தை இன்று நண்பகல் வரை ஒத்திவைத்துள்ளனர்.

(விரிவான செய்தி 03 ஆம் பக்கத்தில்)

# தீர்வு குறித்து ஜனாதிபதி உரையில் திட்டவட்டமான கருத்து இல்லை!

## தமிழர் தரப்பில் பெரும் அதிருப்தி

கொழும்பு, மே 09

நாடாளுமன்றத்தின் புதிய அமர்வை ஆரம்பித்து வைத்து தமது நல்லாட்சி அரசின் கொள்கைத் திட்ட விளக்க உரையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நிகழ்த்தினார்.

எனினும் நாட்டின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான உபாயம் குறித்தோ, அதற்கான தமது திட்டம் குறித்தோ அவர் அதில் விவரமாக ஏதும் தெரிவிக்கவில்லை.

இது, இந்த விடயத்தில் ஜனாதிபதியினதும், அவரது அரசினதும் நிலைப்பாட்டை அறிவதற்காக ஆவலோடு காத்திருந்த தமிழர்கள் தரப்பை பெரும் ஏமாற்றத்துக்குள்ளும், அதிருப்திக்குள்ளும் தள்ளியிருக்கின்றது.

பக்கம் 14 >>>





## புதிய அமைச்சரவையின் முதல் கூட்டம் இன்று

கொழும்பு, மே.09

வழமையாக செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டம் இவ்வாரம் நேற்று நடைபெறவில்லை.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஜனாதிபதி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றமையால் நேற்றைய அமைச்சரவைக் கூட்டம் இன்று வரை ஒத்திவைக்கப்

பக்கம் 09 >>>

## சமுர்த்தி நிவாரண நிதியில் ரூபா 676 கோடி மாயம்

### விசாரணைக்கு பிரதமர் உத்தரவு

கொழும்பு, மே 09

வருமானம் குறைந்த குடும்பங்களுக்குச் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்க எனச் சமூக வலுவூட்டல், நலன்புரி அமைச்சுக்கு வழங்கப்பட்ட 2 ஆயிரத்து 500 கோடி ரூபா நிதியில் 676 கோடி ரூபா நிதி தொடர்பில் எந்த கணக்கும் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க நிதி அமைச்சுக்கு பிரதமர்

பக்கம் 14 >>>

## மைத்திரியின் அதிகாரி எனக்கூறி பண மோசடி

### ஒருவர் சிக்கினார்

கொழும்பு, மே 09

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எனக் கூறி 10 பேருக்கு அரச வேலைபெற்றுத்தருவதாகப் பணம் பெற்று மோசடி செய்தாரென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

"அரச வேலை பெற்றுத்தருவதாக 10 பேரிடம் பணம் பெற்று மோசடி செய்யப்பட்டுள்ளது என

பக்கம் 09 >>>

## சம உரிமைகளுக்கான தமிழரின் அபிலாஷைகளை உறுதி செய்தல்

### ஜனாதிபதி மைத்திரியின் 15 திட்டங்களில் இதுவும் ஒன்று என அவர் நேற்று அறிவிப்பு

கொழும்பு,மே09

புதிய நாடாளுமன்ற அமர்வை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்த உரையில் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும், உண்மையான மக்கள் நேய செயற்றிட்டங்கள் என 15 விடயங்களை வரிசைப்படுத்தினார்.

அவற்றுள் ஒன்றாக 'சம உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்

பக்கம் 09 >>>



### இனிது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நேற்றைய கொள்கை விளக்கவுரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பெருத்த சலசலப்பை ஏற்படுத்தப் போகின்றது என்பது துல்லியமாகத் தெரிய ஆரம்பித்துள்ளது.

இந்த உரை மீதான விவாதம் நாளை நடைபெறும்போது, அதனைப் பிய்த்து உதறிக் கண்டிப்

பக்கம் 14 >>>

## தெல்லிப்பழையில் ரவுடிக் கும்பல்கள் அட்டாவழித்தனம்

யாழ்ப்பாணம், மே 09

தெல்லிப்பழை எட்டாம் கட்டைப் பகுதியில் வாள் வெட்டுக் கும்பல்களின் அடாவடிகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள மையினால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்தக் கும்பல்களின் அடாவடிகளைக் கட்டுப்ப

பக்கம் 09 >>>

## யாழ். வந்த ரயிலில் பயணியுடன் ரயில் பணியாளர் சண்டித்தனம்!

### ஊடகவியலாளரின் துணிச்சலால் உயர்மட்டம் தலையீடு

யாழ்ப்பாணம், மே 09

இலங்கை ரயில் திணைக்களத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர், தமிழ் பெண்ணொருவருடன் தகாத முறையிலும் இனத்து வேசமாகவும் நடந்து கொண்டமையால் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலில் பதற்றம் நிலவியது.

இந்தவிடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றின் செய்தியாளர் தனது கீச்சகத்தில் அறிக்கையிட்டிருந் தார். அதனைப் பெரும்பான்மை இன ஊடகவியலாளர்கள்

பக்கம் 09 >>>



## ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கீச்சகம் நேற்று மாலை 'ஹக்'

### சர்ச்சைக்குரிய கருத்துப் பதிவால் கொழும்பு அரசியலில் பரபரப்பு

ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கி அவரது ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ கீச்சகத்தில் (டுவிட்டர்) கருத்து ஒன்று

பக்கம் 14 >>>

## சு.கவின் 16 எம்.பிக்களும் எதிரணியில் அமர்ந்தனர்

கொழும்பு, மே 09

கூட்டு அரசிலிருந்து விலகிக்கொண்ட ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேருக்கும் நாடாளுமன்றில் எதிரணி

பக்கம் 14 >>>

# சேர்பியா முதல் பிரதி பிரதமர் ரணிலுடன் முக்கிய சந்திப்பு

கொழும்பு, மே 09


சேர்பியா நாட்டின் முதலாவது பிரதி பிரதமரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சருமான இவிக்கா டெசிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இருநாடுகளுக்குமிடையில் பல்வேறு துறைகளில் நல்லுறவை மேம்படுத்துவது குறித்து இதன்போது பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இந்த பேச்சின்போது சேர்பியா வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், அணிசேரா நாடு என்ற ரீதியில் இலங்கையுடன் முன்னாள் யூகோசிலாவேக்கியாவின் தலைவர் மார்சல் ரிட்டோவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் குறித்து இதன்போது குறிப்பிட்டார்.

முன்னாள் யூகோசிலாவேக்கிய நாடான சேர்பியா இந்த உறவுகளை இலங்கையுடன் தொடர்ந்து முன்னெடுக்க இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.



இருநாடுகளுக்கிடையில் உள்ள உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன் போது கருத்துக்களை முன்வைத்தார்.

சேர்பியா நாட்டின் வர்த்தக குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைவந்துள்ள வெளிநாட்டமைச்சர் அரசின் உயரதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

# வவுனியாவில் கோழி வளர்ப்புக்கு வரி செலுத்தும் பொதுமக்கள்!

வவுனியா, மே 09

வவுனியாவில் கோழி வளர்ப்போர்கள் மீது பிரதேச சபையினரால் அரச வரி அறவிடப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக சுய தொழிலான கோழி வளர்ப்பைக் கைவிடவேண்டிய நிலைக்குச் சென்றுள்ளோம் என்றும் இந்த விடயத்தில் வடமாகாண சபை தலையிட்டுத் தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பொது மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த சில தினங்களாக வவுனியா தெற்குத் தமிழ் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் சாஸ்திரிகூழாங்குளம், ஈச்சங்குளம் பகுதிகளில் கோழி வளர்ப்பை மேற்கொள்ளும் பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று கோழி வளர்ப்பை மேற்கொண்டு வருபவர்களிடம் வரி அறிவீடு செய்து வருகின்றனர்.

சுயதொழில்மேற்கொள்ளும் வறிய மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காக இவ்வாறு கோழி வளர்ப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

அதில் கிடைக்கும் வருமானத்தில் தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.



வடமாகாணசபை உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்காகத் தெரிவித்து கோழிகளை வழங்கி விட்டு தற்போது பிரதேச சபையினூடாக மாதாந்த வரி அறிவிடப்பட்டு வருகின்றது. இதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசு சுயதொழில்களை மேற்கொள்வதற்குஎவ்வித அரசவரிகளையும் விதிக்கவில்லை. மேலும் சுயதொழிலை மேற்கொள்பவர்களுக்கு சலுகைகளை வழங்கி வருகின்றது.

இவ்வாறு இருக்கும்போது வடமாகாணத்தில் கோழி வளர்ப்பை மேற்கொள்வதற்கு வரி அறவிடப்படுவதை எங்களால் முற்றாக ஏற்றுக் கொள்ள முடியாது .

இந்தவிடயத்தில்வடமாகாணசபை உடனடியாக தலையிட்டு ஒரு தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (சு- 100)

# அழகு சாதனப் பொருள்களை ஒழுங்குறுத்தலுக்கு புதிய சட்டம்

கொழும்பு, மே 09

சருமத்தை அழகுப்படுத்தப் பயன்படுத்தப்படும் பெரும்பாலான கிறீம் வகைகள் உடம்புக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதால் இந்த கிறீம் வகைகளை ஒழுங்குறுத்தலுக்கு புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக சருமத்தில் பூசப்படும் கிறீம் வகையில் அடங்கியுள்ள மூலப்பொருள்களை பயன்படுத்த வேண்டிய அறிவுறுத்தலும் அதில் குறிப்பிடப்படும் வகையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தலைவர் ஹஸித திலகரத்ன கைச்சாத்திடவுள்ளார்.

இது இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட சட்டத்துக்கு அமைவாக தயாரிப்பாளர்களுக்கும், விநியோகத்தர்களுக்கும் 6 மாத கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

சருமத்தில் பூசப்படும் சில கிறீம் வகைகள் தரமற்றவை என்பது தெரிய வந்துள்ளது. அத்தோடு பயன்படுத்த வேண்டியளவு குறிப்பிடப்படாமையினால் சருமத்தைப் பயன்படுத்த கூடுதலான கிறீம் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்பைக் கருத் தில் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மக்களுக்கான வறட்சி நிவாரணங்கள்!

முல்லைத்தீவு, மே 09

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேசத்தில் 1,088 குடும்பங்களுக்கு வறட்சிக்கான உலர் உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 1,278 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள் எப்பட்டு வருகிறது என கரைச்சிப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேசத்தின் வறட்சி நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனர்த்த முகாமைத்துவத்தின், வறட்சியால் பாதிக்கப்பட்ட 1,088 விவசாயக் குடும்பங்களுக்கான வறட்சி நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது 1278 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்படி, அக்கராயன்குளம் பிரதேசத்தில் 465 குடும்பங்களுக்கும், பொன்னகர் பகுதியில் 142 குடும்பங்களுக்கும், பாரதிபுரம் பகுதியில் 130 குடும்பங்களுக்கும், மலையாளபுரம் பகுதியில் 45 குடும்பங்களுக்கும், விவேகானந்தநகர் பகுதியில் 10 குடும்பங்களுக்கும், கிருஷ்ணபுரம் பகுதியில் 234 குடும்பங்களுக்கும், உதயநகர் கிழக்குப் பகுதியில் 5 குடும்பங்களுக்கும், அம்பாள் நகர் பகுதியில் 220 குடும்பங்களுக்கும், கணேசபுரம் பகுதியில் 27 குடும்பங்களுக்கும் இவ்வாறு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆர்ப்பாட்டக்காரர் மீது நேற்று கண்ணீர்ப்புகை

வேலையில்லாப்பட்டதாரிகள் நேற்று முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இருந்து ஜனாதிபதி செயலகத்திற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முற்பட்டபோதே பொலிஸார் கண்ணீர்ப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.



# நீரிழிவு ஒரு நோயல்ல சமூகப் பிரச்சினை – வைத்திய நிபுணர் அருளானந்தம்

நீரிழிவு ஒரு நோயல்ல சமூகப் பிரச்சினை என்று கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட விரிவுரையாளர் வைத்திய நிபுணர் எம்.அருளானந்தம் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டில் உலகில் 429 மில்லியன் பேர் நீரிழிவு பாதிப்புக்குள்ளாகினர். 2045 இல் உலகில் 90 வீதமானவர்கள் இதனால் பாதிக்கப்படுவர் என்று வைத்திய நிபுணர் எம்.அருளானந்தம் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் மா. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற நீரிழிவு தொர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

5 செக்கனுக்கு ஒருவர் நீரிழிவினால் பாதிக்கப்படுகின்றனர். 10 செக்கனுக்கு ஒருவர் மரணமடைகின்றனர். 30 செக்கனுக்கு ஒருவர் கால், கைகளை இழக்கின்றனர். நீரிழிவு ஒரு நோயல்ல சமூகப் பிரச்சினை. 2018ஆம் ஆண்டில் உலகில் 429 மில்லியன் பேர் நீரிழிவுப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

2045 இல் உலகில் 90 வீதமானவர்கள் இதனால் பாதிக்கப்படுவர் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. நம்முடைய உடற்பயிற்சி, உணவுப்பழக்க வழக்கங்கள், நடைமுறைகளால் அதனைக் கட்டுப்படுத்த முடியும்.

நமது உணவு நடைமுறைகள் மாற்றம் பெற்றுவிட்டன. அதனை மாற்றம் செய்ய வேண்டும். கலாசாரம், அதன் நடைமுறைகள் எல்லாம் உடல் திறன் மேம்பாடுகள் சுகாதார நடைமுறைகளுடனே ஏற்படுத்தப்பட்டுள்ளன. சுகாதாரக் கல்விக்கும் சுகாதார மேம் பாடு விழிப்புணர்வுகளுக்கும் வித்தியாசம் உள்ளது. அரச அதிகாரிகள் எல்லோரும் இணைந்ததாக மக்களுக்கு நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளவேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பை வழங்குவதே இதில் முக்கியமானதாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.



காலைக்கதிர்



# ரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்த முஸ்தீபு

## மின் பொறியியலாளர்களும் போராட்டம்

கொழும்பு, மே 09

நேற்று நள்ளிரவு முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட முஸ்தீபு செய்திருந்த ரயில்வே தொழிற் சங்க ஊழியர்களுக்கும் போக்கு வரத்து உயரதிகாரிகளுக்கும் இடை யில் நேற்றுக் காலை இடம்பெற்ற கலந்துரையாடல் எவ்வித தீர்மானங்களும் எட்டப்படாத நிலையில் முடிவுக்கு வந்துள்ளது.

நேற்றுக் காலை 10 மணியளவில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க மற்றும் போக்குவரத்து மற்றும் சிவில்விமானசேவைகள் அமைச்சரின் செயலாளர் உட்பட உயரதிகாரிகளும் தொழிற்சங்க ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் தொழிற்சங்க ஊழியர்களின் வேண்டுகோளுக்குச் சாதமாக எவ் வித முடிவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே நேற்று நள்ளிரவு முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள தொழிற் சங்க ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர் என நேற்று முன்னிரவு தெரிவிக்கப்பட்டது.

எனினும் -

கடைசி நேரத்தில் எடுக்கப்பட்ட சில சமரச முயற்சிகளை அடுத்து தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை இன்று நண்பகல் வரை ஒத்திவைப்பதற்கு ரயில்வே ஊழியர்கள் இணங்கினர் என நேற்றுப் பின்னிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் -

மின்சார சபை பொறியியலாளர்கள் நேற்று மாலை முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தமது பணிகளை முன்னெடுக்கவுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

குறைந்த செலவில் மின்சாரம் பெற்றுகொள்ளக் கூடிய தமது திட்டத்துக்கான அனுமதி இன்னமும் கிடைக்கப்பெறாதமையை ஆட்சேபித்தே மட்டுப்படுத்தப்பட்டளவில் பணியில் ஈடுபடும் போராட்டத்தில் தாங்கள் குதித்துள்ளனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக ஒத்துழைப்பு வழங்குவோம் என இலங்கை மின்சார சபையின் பணியாளர் சங்கம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# யாழ்ப்பாண மாநகர சபையின் நிலையியல் குழுக்கள் தெரிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாண மாநகரசபையில் ஆறு நிலையியல் குழுக்கள் முன்னர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் உறுப்பினர்களைப் பகிர்வதில் கட்சிகளுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து மேலுமொரு நிலையியல் குழுவையும் சேர்த்து மொத்தம் ஏழு நிலையியல் குழுக்கள் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாநகரசபையின் கூட்டத்தொடர் நேற்று மாநகர மேயர் ஆனோர்ல்ட் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ஆறு நிலையியல் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு உறுப்பினர்களை நியமிப்பதற்கான சபை அங்கீகாரம் கோரப்பட்டது.

இதன்படி முதலில் நிதிக்குழு, சுகாதாரகுழு, பராமரிப்பு குழு ஆகிய மூன்று குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு மேலதிகமாக மூன்று குழுக்களாக சமய, கலாச்சார, கலை, விளையாட்டு குழு, இலஞ்ச ஊழல் கண்காணிப்பு குழு, பெண்கள், சிறுவர் விவகார குழு ஆகிய குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

இருந்த போதிலும் நிதிக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் ஈ.பி.டி.பியினர் தமக்கு ஓர் உறுப்பினர் இடம் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாகவும், உறுப்பினர் தெரிவை வாக்கெடுப்புக்கு விடுமாறும் கோரியிருந்தார்.

இதனையடுத்து இது தொடர்பாகக் கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு எட்டப்படதையடுத்து ஆறாவது குழுவிற்கு மேலதிகமாக ஏழாவது குழுவாக கல்வி, விளையாட்டு மற்றும் நலன்புரி குழு என்ற புதிய குழு உருவாக்கப்பட்டது.

இந்த ஏழு குழுக்களிற்கும் ஒவ்வொரு குழுவிற்கும் ஆறு உறுப்பினர்கள் வீதம் நியமிக்கப்பட்டனர். அத்துடன் நிதிக் குழுவிற்கு மாநகர மேயர் தலைமை தாங்குவார் எனவும், ஏனைய குழுக்கள் ஒவ்வொன்றும் கூடும் போது அதற்கான தலைவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# யாழ். புல்லுக்குளக் கடைத் தொகுதி குறித்து மாநகரசபையில் சூடான கருத்துப் பரிமாற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.புல்லுக்குளத்தில் உள்ள மாநகர சபையின் காணியின் கட்டத் தொகுதியில் 3 வருடங்களுக்கு மேலாக வாடகை செலுத்தாமல் இயங்கும் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. இதில் கருத்து வெளியிட்ட உறுப்பினர் வி.மணிவண்ணன் - புல்லுக்குளப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கட்டத்தில் உள்ள அனைத்துக் கடைத் தொகுதிகளும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. ஆனால் 34 கடைகள்தான் சபையிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன. - என்றார்.

ஏன் ஏனைய கடைகள் தொடர்பில் சபை நடவடிக்கை எடுக்கவில்லை? சட்டரீதியில் முதலீட்டாளரிடம் இருந்து சபை அவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை? 3 வருடங்களுக்கு மேலாக ஏன் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை? - என அவர் கேள்வி எழுப்பினார்.

இதனால் சபைக்கு 3 வருடங்களுக்கு மேலாக 20 கடைத் தொகுதிகளிடம் இருந்து வாடகையாக வர வேண்டிய பெரும் தொகை பணம் சுரண்டப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஆணையாளர் -

யாழ்.நகரப்புறத்தில் உள்ள புல்லுக்குளப் பகுதியிலே முதலீட்டாளர் ஒருவரினால் கடைத் தொகுதி ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதில் 54 கடைகள் கட்டப்பட்டுள்ளன. அதில் 32 கடைகள் விற்பனை செய்யப்பட்டு, அவை யாழ்.மாநகர சபையிடம் அவர் கையளித்துள்ளார்.

அக் கடைகள் தொர்டர்பான நடவடிக்கைகளை யாழ்.மாநகர சபையின் நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது. ஏனைய கடைகளை முதலீட்டாளர் இன்னும் மாநகர சபையிடம் கையளிக்கவில்லை.

முதலீட்டாளருக்குப்பலதடவைகள் அறிவித்துள்ள போதும், அவர் ஏனைய கடைகளை மாநகர சபையிடம் கையளிப்பது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. - என்றார்.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் பின் வருமாறு கூறினார்:-

சபையைப் பொறுப்பேற்ற பின்னர் குறித்த கடைத் தொகுதி விவகாரம் தொடர்பில் எமக்கு வந்த கோவைகளை ஆராய்ந்தோம்.

ஆணையாளர், செயலாளர், கணக்காளர், பொறியியலாளர் மற்றும் சட்டத்தரணியையும் அழைத்து, குறித்த கட்டத் தொகுதியின் முதலீட்டாளரையும் அழைத்துப் பேசியிருந்தோம்.

அப்போது எஸ்.எல்.ரி. நிறுவனத்தின் பணிப்பாளர் கடைத் தொகுதிகளை கையளிப்பதில் பிரச்சினைகள் உள்ளன எனத் தெரிவித்திருந்தார்.

மேலும் குறித்த கட்டத்தில் உள்ள இரண்டு தளங்கள் ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தின் பாவனைக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்றும், அவை உரிய முறையில் அனுமதி பெறப்படாமல் பயன்படுத்தப்படுகின்றன என்றும், அக் கட்டடத் தொகுதி எடுக்கப்பட்ட நாளில் இருந்து இன்றுவரை வாடகை செலுத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

தொலைக்காட்சி நிறுவனம் சபைக்கு வாடகை செலுத்தாமல் கட்டடத்தை ஆக்கிரமித்து வைத்துள்ளமை பாரதூரமான நடவடிக்கையாகும்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு சபையில் ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக ஒப்பந்தகாரருக்கு நிபந்தனைகளை விதித்தும், சட்ட ரீதியில் அணுகியும் எவ்வாறு அக்கடைத்தொகுதியை சபைக்கு உட்படுத்துவது என்பது தொடர்பிலும் முடிவு எடுக்கப்பட வேண்டும். - என்றார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட வி.மணிவண்ணன், இனியும் ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காது, அந்த கடைத்தொகுதியை கையகப்படுத்தப்படுத்தியவர்களுக்கு எதிராக சபை சட்ட நடவடிக்கை மேற்கொளள் வேண்டும். - என்றார்.

சட்ட நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்ற விடயத்தை சபை ஏற்றுக்கொண்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் என முதல்வர் தெரிவித்தார். (உ)

# முதல்வரின் இன்றைய கூட்டத்தில் பங்கேற்கார் பல்கலை மாணவர்கள்

யாழ்ப்பாணம், மே 09

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை ஒன்றிணைந்து முன்னெடுக்க வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் விடுத்த இன்றைய கூட்டத்துக்கான பொது அழைப்பை ஏற்பதில்லை என்ற முடிவைத் தாங்கள் எடுத்துள்ளனர் என யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு வரும் மே 18 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் ஒழுங்கமைப்பில் நடத்தப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார்.

அத்துடன், அந்த ஒழுங்குகளை முன்னெடுக்க வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இந்தக் குழு இன்று புதன்கிழமை கூடி நினைவேந்தல் நிகழ்வின் ஒழுங்குகளை முன்னெடுக்கும் என முதலமைச்சர் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஓரணியில் முன்னெடுக்க முன்வரும் அனைத்துத் தரப்பினரையும் இன்றைய கூட்டத்தில் பங்கேற்குமாறு முதலமைச்சர் பொதுவான அழைப்பையும் விடுத்திருந்தார்.

அத்துடன், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று நினைவேந்தல் நிகழ்வு ஒழுங்குகள் தொடர்பில் கருத்துரைக்குமாறும் முதலமைச்சர் கேட்டிருந்தார்.

முதலமைச்சரின் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதில்லை எனவும் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை எனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று தெரிவித்தனர்.

"தமிழினப் படுகொலையை சகலதரப்புகளும் ஒன்றிணைந்து பேரழுச்சியுடன் நினைவேந்துவது என்ற நோக்குடன் நாம் ஒழுங்குகளை முன்னெடுத்தோம்.

"அதனை ஏற்க மறுத்து வடக்கு மாகாண சபை தாமே நினைவேந்தலை நடத்தப்போவதாக. அறிவித்துள்ளது. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தின் பேரழுச்சி நிகழ்வாக நடத்த நாம் திட்டமிட்டமையை ஏற்காமல் வடக்கு மாகாண மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை செயற்படுவதில் எமக்கு உடன்பாடில்லை" -என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.


## ஆடம்பர வசதியுடன் புதிய வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் இருந்து 4 Km தூரத்தில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.

★ திருமண நிகழ்வுகள், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்கள் மற்றும் ஏனைய சுப நிகழ்வுகளுக்கு வருபவர்கள் தங்குவதற்குரிய சகல வசதிகளுடன் உண்டு. A/C, Non A/C, தளபாட வசதிகள், சமையல் பாத்திரங்கள், எலற்றோனிக் உபகரணங்கள் என அனைத்து வசதிகளுடன் உண்டு. (30 பேர் வரை தங்கக் கூடிய வசதி)

தொடர்புகளுக்கு:- 077 110 4770

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# ஒன்றுபட்டு நினைவேந்தல்

மே – 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை யார் நடத்து வது என்ற சர்ச்சை புதிதாகக் கிளப்பப்பட்டிருக்கின்றது.

வடக்கு மாகாணசபை தேர்தல் மூலம் நிறுவப்பட்ட பின்னர் கடந்த 3 ஆண்டுகளாக இவ்விடயம் தொடர்பான பிரதான நிகழ்வு வடக்கு மாகாண சபையாலேயே முன்னெடுக்கப்பட்டு வந்தது.

அதேசமயம், இப்பகுதியில் வேறு தரப்புகளும் தனித் தனியாகவும் தன்னிச்சையாகவும் பிறிதாகவும், அது தொடர்பான அஞ்சலி மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தி வந்தன.

இந்த நிலையிலேயே அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து ஒரே நிகழ்வாக இதனை நடத்தப் போகின்றோம் என்ற அறிவிப்பு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் அண்மையில் வெளியிடப்பட்டது.

அது தொடர்பில் சில சந்தேகங்கள், ஐயங்கள் தெரிவிக்கும் கருத்துகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தரப்பில் இருந்து பிரதிபலிக்கப்பட்டமையும் –

அதற்குப் பதிலடியாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் விளக்கங்கள், விவகாரங்கள் வெளியிடப்பட்டமையும் தெரிந்தவையே.

இந்தப் பின்புலத்தில், வழமைபோல நினைவேந்தல் நிகழ்வை வடக்கு மாகாணசபையே நடத்தும் என சபை உறுப்பினர்களைக் கூட்டி ஆராய்ந்த பின்னர், வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவிப்பை வெளியிட –

அது தொடர்பான கூட்டத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடனும் ஏனைய சபை உறுப்பினர்களுடன் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துரையாடிய பின்னரும், முதலமைச்சரின் அறிவிப்புக்கு பதிலடியாக மாணவர் ஒன்றியத்தின் சார்பில் அறிக்கை ஒன்றைப் பகிரங்கப்படுத்த –

இப்போது விவகாரம் சூடு பிடித்து, சர்ச்சையாகியிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது பிந்திய அறிக்கையில் சுட்டிக்காட்டியபடி –

*"முள்ளிவாய்க்காலில் இடம் பெறும் நிகழ்வானது தனியே முள்ளிவாய்க்கால் மண்ணில் மடிந்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வோ அல்லது மே 18 என்பது தனியே அன்று மடிந்த மக்களை நினைவு கொள்ளும் நாளோ அன்று.*

*"மாறாகத் தமிழினம் எதிர்கொண்ட இனவழிப்பை ஒட்டு மொத்தமாகச் சுட்டிநிற்கும் நாள்தான் மே 18. இந்த நாள் வடக்கு மாகாணத்துக்கு மட்டும் உரியதன்று.*

– என்பது முற்றிலும் சரியானதே. ஏற்றுக் கொள்ளத்தக்கதே. ஆனாலும் அதனடிப்படையில்–

*"எனவே, நிகழ்வை வட மாகாண சபை தான் நடத்துவது என்பது அரசியல் பொருத்தமற்ற செயல். அத்தோடு சர்ச்சைக்குரிய அந்த அரசியல் அதிகாரக் கட்டமைப்பு தமிழர்களைத் தலைமை தாங்கும் கட்டமைப்பாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவுமில்லை."*

– என்று தொடங்கி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அதன் பின்னர் கூறும் பல கருத்துக்களும் கொஞ்சம் தடம் மாறியமை போன்று தென்படுகின்றன.

*'தமிழர்களின் தலைமை தாங்கும் கட்டமைப்பு'*– என்ற அதிகாரம் பற்றி பேசத் தலைப்பட்டால் அது பல குழப்பங்களுக்கும் கூட வழி வகுத்து விடலாம். அப்படிப் பார்த்தால் இன்றைய நிலையில் இந்த நிகழ்வை நடத்தும் தனிப் பாத்தியம் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தான் இருக்கக் கூடும். தேசிய ரீதியில் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் மக்களினால் பெரிதும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு அதுதான்.

அது போல *'வடக்கு மாகாண சபையானது தேர்தல் வழி அமைக்கப்படும் கட்டமைப்பு'* என்றும், *'அது காலப் போக்கில் யார், யார் கையிலாவது போய்ச் சேரும்'* என்றும், *'தொடர்ந்தும் வரப்போகும் முதல்வர்களும் ஆளுங்கட்சியும், உறுப்பினர்களும் எவ்வாறு அமைவார்கள் என்று உறுதிப் படச் சொல்ல முடியாதவாறு, இனவழிப்புக்குத் துணை போனவர்களே கூட மாகாண சபை நிர்வாகத்தில் கோலோச்சக் கூடும்'* என்றும் மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் கூறுவது வாஸ்தவம்தான்.

ஆனால், யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாணவர் உட்சேர்க்கையை நோக்கும் போது இந்த அச்சம், அந்த அச்சத்தை வெளியிடும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் எதிர்கால நிலைமை குறித்து சந்தேகம் வெளியிடும் விடயத்லும் கூடக் கனகச்சிதமாகப் பொருந்தத்தக்கதே என்பதும் மறுப்பதற்கில்லை.

ஒற்றுமையாக – ஒருமுகப்பட்டு – இந்த நினைவேந்தலை தமிழினம் நடத்த வேண்டும் என்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் சிந்தனை உயரியது. சந்தேகத்துக்கு அப்பால் மேன்மையானதும், பாராட்டுக்கும் விதந்துரைப்புக்கும் உரியதுமான நடவடிக்கை.

ஆனாலும், கடந்த மூன்று ஆண்டுகளாக இதனைக் கட்டமைப்பு ரீதியாக நடத்தி வரும் தரப்பு வடக்கு மாகாணசபை என்ற முறையில், இந்த விடயத்தில் இறங்கிப் பகிரங்க அறிவிப்பு விடுக்க முன்னர், மாணவர் ஒன்றியம் அது குறித்து முதலில் – முதன்முதலில் – வடக்கு மாகாண முதல்வருடன் விரிவாகப் பேசியிருக்க வேண்டும். அப்படிப் பேசினார்களா? பேசாமலேயே தம்பாட்டிலேயே முந்திக் கொண்டு முந்திரிக் கொட்டை மாதிரி அறிக்கை வெளியிட்டார்களா என்பதில் தெளிவு இல்லை.

இந்த விடயத்தில் இன்னும் குடி முழுகிப் போய்விடவில்லை என்று நினைக்கின்றோம்.

மாணவர் ஒன்றியம், இன்று இந்த விடயத்துக்காக வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் கூட்டியிருக்கும் கூட்டத்தில் பங்கு பற்றி, தமது இந்த நல்லெண்ணச் சிந்தனையை மீளவற்புறுத்தி – வலியுறுத்தி – இந்த நினைவேந்தலை தமிழர் ஐக்கியப்பட்டு, ஒற்றுமையாக முன்னெடுக்கும் உயரிய முயற்சிக்கு செயலுருக் கொடுக்கத் தொடர்ந்து முனைய வேண்டும். அவர்களையும் அரவணைத்து ஒன்றுபட்டு இதனை முன்னெடுப்பது வடக்கு மாகாண சபையினதும் முதல்வரினதும் கடமையும் கூட என்பதைக் சுட்டிக்காட்ட விழைகிறோம்.

# 30 வருடங்களில் செய்யாதவை 3 வருடங்களில் நிறைவடைவு

## மே தினக் கூட்டதில் மனோ தெரிவிப்பு



கொழும்பு, மே 09

இந்த நாட்டில் 30 வருடங்கள் சிலர் செய்யாதவற்றை 3 வருடங்களில் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஊடாகச் செய்துள்ளோம் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நடைபெற்ற தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் முற்போக்குக் கூட்டணியே முதன் முதலாக மலையக மக்களின் பிரச்சினையை ஆராய்ந்து அதற்காகத் தீர்வு ஒன்றைக் காணும் வகையில் தனி வீடுகளை அமைத்து 7 பேர்சர்ஸ் காணிக்குரிய உறுதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட காரணம் என்பதை மக்கள் உணரவேண்டும்.

அதேவேளையில் அம்பகமுவ, நுவரெலியா பிரதேசத்தில் காணப்பட்ட பிரதேச சபைகளை இன்று விரிவுப்படுத்தி 6 சபைகளை உருவாக்கிய பெருமையும் தமிழ் முற்போக்குக் கூட்டணியைச் சாரும்.

மலையகத்திற்கென புதிதாக அதிகார சபை ஒன்றை அமைப்பதற்குரிய அமைச்சரவை தீர்மானத்தை எடுக்கவிருக்கின்றோம். சுதந்திரமான மலைநாடு ஒன்றை நாம் உருவாக்க இருக்கின்றோம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மலையகம் சார்ந்த நுவரெலியா, பதுளை, இரத்தனபுவரி, கேகாலை, கொழும்பு ஆகிய பகுதிகளில் எமது உறுப்பினர்களாக 110 உறுப்பினர்களை வென்று தமிழ் முற்போக்குக் கூட்டணி சாதனை படைத்துள்ளது.

இவை அனைத்தும் மக்களின் சக்தியால் எமக்குக் கிடைத்தவையாகும். இன்று தோட்டப்பகுதிகளில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காகக் காணிகளைப் பெறுவதற்கான அமைச்சரவை தீர்மானத்தையும் வெகுவிரைவில் பெறவிருக்கின்றோம்.

தடைப்பட்டிருந்த இந்திய அரசின் வீடு அமைப்பையும், மலையக மக்களுக்காகப் பெற்ற பெருமையும் தமிழ் முற்போக்கு கூட்டணியே சாரும். – என்றார். (ஐ)

# மின்சார சபைக்குள் மோசடிகள் தாராளம்

## 'கபே' குற்றச்சாட்டு

கொழும்பு, மே 09

இலங்கை மின்சார சபையில் பெருமளவு மோசடிகள் இடம் பெறுகின்றன எனக் 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை மின்சார சபைக்கு வரும் ஒவ்வொரு நிலக்கரிக் கப்பலிலும் 120 மில்லியன் ரூபா மோசடி செய்யப்படுகின்றது. விநியோகிக்கப்படும் மின்சாரத்தில் ஒவ்வொரு அலகுக்கும் 14 ரூபா மோசடி செய்யப்படுகின்றது.

மின்சாரத் துறையில் முதலீடு செய்ய முன்வந்த வெளிநாட்டு முன்னணி முதலீட்டாளர்களுக்கு மின்சார சபையின் உயர் மட்டத்திலுள்ள சிலர் அனுமதி வழங்கவில்லை. அவர்கள் மாபியா போன்றே செயற்படுகின்றனர்.

அரச அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் மோசடிகள் தொடர்பில் பொது அமைப்புகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அரசின் உயர்மட்டத்தினர் தட்டிக்கழித்து விடுகின்றனர். – என்றார். (ஐ)

# கூட்டமைப்பைச் சாடுகிறது தேசிய சுதந்திர முன்னணி

கொழும்பு, மே 09

வடக்கு – கிழக்குப் பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டு வரும் எதிர்ப்பை வன்மையாகக் கண்டிப்பதாகத் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகளை நிறுவுவதை எதிர்ப்பதாக, கூட்டமைப்பு தேசிய அரசிடம் வலியுறுத்தியுள்ள விடயத்தை தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயந்த சமரவீர சுட்டிக் காட்டியுள்ளார்.

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தேசியப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், வடக்கு, கிழக்கில், பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதை எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார். சுமந்திரனின் இந்த இனவாதக் கருத்தை வன்மையாகக் கண்டிக்கிறார் எனவும், அன்பு மற்றும் கருணையைப் போதிக்கும் பௌத்த மதம், வேறு ஒரு மதத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமையாது எனவும் ஜயந்த சமரவீர குறிப்பிட்டார். (ஐ)

# கண்டிக் கலவரம் தொடர்பில் திலும் எம்.பியிடம் விசாரணை

அண்மையில் கண்டி மற்றும் திகண பகுதியில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்கு, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகமவுக்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

நாளை வியாழக்கிழமை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் திகண கலவரத்தின்போது அந்தப் பிரதேசத்தைச் சுற்றி அவரது வாகனத்தில் பாதுகாவலர்கள் சென்றமை தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளவே அவர் அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட விசாரணை நாளில் நாடாளுமன்ற அமர்வுகள் இடம் பெறவுள்ளமையால் விசாரணைத் தினத்தை மாற்றுமாறு தாம் கோரிக்கை விடுத்துள்ளார் என திலும் அமுனுகம கூறினார். (ஐ)

## நாளை

10.04.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம்: சதயம் மு.ப 9.50 வரை
திதி : நவமி மு.இ 8.50 வரை
சுபநேரம் : 7.24 – 8.54 வரை
இராகுகாலம் : 1.24 – 2.54 வரை

# விமல், கம்மன்பிலவின் மாபியா குழுவே கோட்டாபயவின் பின்னால் உள்ளது!

கொழும்பு, மே 09

கோட்டாபய ஜனாதிபதியானால் அவருடன் இருக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்ற மாபியா குழுவினரே நாட்டின் நிருவாகத்தை மேற்கொள்வார்கள். இது மிகவும் ஆபத்தானது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.




கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜே.வி.பியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பதிலாக அவருடைய சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினால் நன்றாக இருக்கும்; ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதிலாக சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாக்கினால் நன்றாக இருக்கும் என சிலர் கருதுகின்றனர்.

ஆள்கள் மாறினாலும் அவர்களால் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது. கடந்த கால அனுபவம் இது.

இதனாலேயே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சு)

## உடவளவை நீர்மட்டம் அதிகரிப்பு



கொழும்பு, மே 09

உடவளவை நீர்த்தேக்க பகுதியில் கடும்மழை பெய்து வருவதன் காரணமாக நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

நீர் வழிந்தோடுவதற்காக நேற்று முன்தினம் இரவு 10.30 முதல் நீர்த் தேக்கத்தின் 3 கதவுகள் ஒன்றரை அடி அகலத்தில் திறக்கப்பட்டுள்ளன என செயற்பாட்டு பொறியியலாளர் சுஜீவ குணசேகர தெரிவித்தார்.

இதன் காரணமாக வளவகங்கையின் இருமரங்கிலும் உள்ள மக்கள் நதி நீர் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு பொறியியலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் வாழ்வில்

## அரசால் ஒளியேற்ற முடியாது; மஹிந்தவினாலேயே முடியும்

மலையக மக்கள் முன்னணி உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, மே 09

நல்லாட்சி அரசால் மலையக மக்களின் வாழ்வில் ஒளியேற்ற முடியாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவாலே அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற முடியும் என மலையக மக்கள் முன்னணி உறுப்பினர் டாக்டர் செந்தில் ராஜ் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் தொழிலாளர் தினக்கூட்டம் நேற்றுமுன்தினம் காலி சமனல மைதானத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

122 வருடங்களாக தொழிலாளர் தினம் மே மாதம் முதலாம் திகதியே கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால், இந்த வருடம் அது மாற்றப்பட்டுள்ளது. அரசு சகல விடயங்களிலும் மாற்றம் ஏற்படுத்த முனைகிறது. ஆனால், அதன் மூலம் பாதகமே ஏற்படுகிறது. இவ்வாறான மாற்றங்கள் நாட்டை எங்கு கொண்டு சென்று விடுமோ தெரியாது.

மேலும், இருநூறு வருடகால வரலாற்றைக்கொண்ட மலையக மக்களின்



பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. காலம் காலமாக அம்மக்கள் இழிபேச்சுகளுக்கு உட்பட்டு வருகின்றனர். ஆட்சிக்கு வரும் அரசுகள் அம்மக்களை ஏமாற்றியே வருகின்றன.

இனியும் அந்நிலையைத் தொடர விடமுடியாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவாலேயே அந்த மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்க முடியும்.

ஆகவே மலையக மக்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட்சிக்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின் தடை

யாழ்ப்பாணம், மே 09

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை –

**யாழ். பிரதேசத்தில்** – உபயகதிர்காமம், வல்லிபுரம், வல்லிபுரம் நீர்ப்பாசனம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்** – தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், கணேசபுரம் கிராமம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார்பிரதேசத்தில்** – முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன்பிட்டி, ஆத்திக் குளி, செம்மண்தீவு நெற்களஞ்சியம், சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், டொன் பொஸ்கோ, தலைமன்னார் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் – மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## மண்சரிவின் காரணமாக 85 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, மே 09

மண்சரிவின் காரணமாக ஹல்துமுள்ள கினிகத்கல என்ற இடத்தில் 85 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த மண்சரிவின் காரணமாகக் கினிகத்கல வீதியில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. ஹப்புத்தளை கல்கந்த என்ற இடத்தில் 14 குடும்பங்கள் தற்போது வெளியேற்றப்பட்டிருக்கின்றன என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## எரிகாயங்களுடன் சடலம் மீட்பு

கொழும்பு, மே 09

மாவனெல்ல பகுதியில் எரிகாயங்களுடன் பெண்ணொருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 65 வயதான பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் இந்தச் சடலம் மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி மாணவர்களுக்கு ஜூடோ விளையாட்டு பயிற்சி



கிளிநொச்சி, மே 09

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலை கல்வியை நிறைவு செய்து வெளியேறியோருக்கான ஜூடோ விளையாட்டு பயிற்சி அண்மையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸின் ஒருங்கிணைப்பில் கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கீழ் இயங்கும் 57 ஆவது படைப் பிரிவின் கேட்போர் கூடத்தில் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் விஜித ரவிபிரியவின் ஆலோசனை மற்றும் வழிக்காட்டலின் கீழ் நடைபெற்றது.

இரண்டுநாள்கள் இடம்பெற்ற பயிற்சியில் 70 க்கும் அதிகமான விளையாட்டு வீர வீராங்கனைகள் கலந்து கொண்டமையுடன், இலங்கை இராணுவ ஜூடோ கழகத்தின் ஆலோசகரான சாஜன் டி.எஸ்.ஜி.டி.எஸ் பரகடுவ மற்றும் கோப்ரல் ஜி.எஸ்.ஏ.ஏ. விஷான் பந்து, மற்றும் இராணுவ மகளிர் வீராங்கனை ஷானிக்கா வீராங்கனை வி.ஜே.எஸ்.எச் குமாரி ஆகியோரினால் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கலைப்பீடத்தில் இன்று

## காட்சிப்படுத்தல் நிகழ்வு ஆரம்பம்

யாழ்ப்பாணம் மே 09

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் சுலைமான் ஆச்சியின் பன் பாய்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு புதிய கலைப்பீட கட்டடத் தொகுதியிலுள்ள கலைக்கூடத்தில் இன்று மதியம் 2 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தினமும் முற்பகல் 10 மணி முதல் 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

காண்பியத்துறையில் ஆர்வமுடைய அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நுண்கலைத்துறை தலைவர் தா.சனாதனன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# சாவகச்சேரி கோட்ட புத்தாண்டு விழா

சாவகச்சேரி, மே 09

தமிழ், சிங்களப் புத்தாண்டு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி அ.சாந்த சீலனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(இ)

## தினசரி ராசி பலன் (09.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரைத்திங்கள் 26 ஆம் நாள் புதன்கிழமை நவமித்திதி இரவு 10.27 மணி வரை பின்னர் தசமி. நட்சத்திரம்: அவிட்டம் பகல் 10.12 மணி வரை பின்னர் சதயம். மரணயோகம் பகல் 10.12 மணி வரை பின்னர் சுபயோககம்.

**ராகுகாலம்** - பகல் 12.06 மணி முதல் 1.40 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.22 மணி முதல் 5.52 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - சித்திரை மாத தேய்பிறை நவமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - சதயம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உத்தியோகத்தில் மேன்மையான நிலை அமையும். பூர்வீகச் சொத்து மூலம் சிலருக்குத் தனவரவு ஏற்படும். வியாபாரம் நல்ல முன்னேற்றமடையும்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். வியாபாரம் ஏறு இறங்குமுகமாக நடக்கும். தொழிலில் கடின உழைப்பு இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும்.

**மிதுனம்** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் நிரம்பிக் காணப்படும். வேலைக்குப் போகும் பெண்கள் ஊதிய உயர்வு போன்ற நற்பலன்கள் கிடைக்கப் பெறுவார்கள்.

**கடகம்** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் உறவினர்களால் பிரச்சினைகள் உண்டாகும். தொழில் மந்த நிலையில் நடக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும்.

**சிம்மம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சமமாக இருக்கும். உத்தியோகத்தர்கள் பணியில் அக்கறையுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரம் போன்றவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும்.

**கன்னி** யோகமான நாள். பணபலம் மனபலம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வீடு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரும். தடைப்பட்ட திருமண காரியம் ஒப்பேறும்.

**துலாம்** மகிழ்ச்சியான நாள். பணவரவு அதிகரிக்கும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும். நீண்ட காலம் காணாதிருந்த சகோதரியைக் கண்டு மகிழ்வார்கள்.

**விருச்சிகம்** கவலையான நாள். பொருளாதாரம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். தாயாரின் உடல்நிலை மோசமடையும். வியாபாரத்தில் பெரும் நட்டம் உண்டாகும்.

**தனுசு** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர் வருகை மகிழ்ச்சியைத் தரும். நண்பர்களின் ஒத்துழைப்பு நல்ல முறையில் இருந்து வரும்.

**மகரம்** அனிமையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் சந்தோஷம் குடிகொள்ளும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். சகோதர உறவு வலுவடையும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேர்வார்கள்.

**கும்பம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி மேலோங்கும். செய்யும் தொழிலில் மேன்மை உண்டாகும். உத்தியோகத்தில் எதிர்பாராத வகையில் உயர்வுகள் கிடைக்கும்.

**மீனம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் பாதிப்புறும். தொழிலில் பல இடையூறுகளால் சிரமப்பட நேரும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

சந்திராஷ்டம நாள்: புனர்பூசம் 4ஆம் பாதம்,பூசம் ,ஆயிலியம் ஆகிய பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# மொரிஷியஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 7 இலங்கையர்கள்



கொழும்பு, மே 09

இலங்கையை சேர்ந்த குழுவொன்று ஆட்கடத்தல்காரர்களால் அழைத்து சென்று மொரிஷியஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

செஷல்ஸ் நாட்டிலுள்ள இலங்கைக்கான தூதுவர் டிக்கிரி ஹேரத் குணத்திலக்க இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்-

பெரும் தொகையிலான பணத்தை அவர்கள் செலவிட்டு இந்த இடத்தில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் தங்கியிருக்கின்றனர்.

இவர்களிடம் அந்த நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட உரிய ஆவணம் இல்லாமையால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 7 இலங்கையர்கள் நாட்டுக்கு திருப்பியனுப்ப தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இலங்கைக்கான தூதுவர் டிக்கிரி ஹேரத் குணத்திலக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.





கிளிநொச்சி, மே 09

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் இருந்து பொதுச்சந்தை வரை செல்கின்ற நகரின் உட்புற வீதி கரைச்சி பிரதேச சபையினால் தற்காலிகமாக நேற்று முன்தினம் புனரமைக்கப்பட்டது.

கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தக சங்கத்தினரினதும் கிளிநொச்சி நகரின் கிராம அபிவிருத்தி சங்கத்தினரினதும் வேண்டுகோளுக்கு அமைய கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணா சலம் வேழமாலிகிதனின் விசேட பணிப்பில் நடைபெற்றது.

(இ)

# வாகனங்களின் வேகத்தை மதிப்பீடு செய்யும் புதிய உபகரணம் தற்போது பாவனையில்!



அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்களின் வேகத்தை மதிப்பீடு செய்வதற்காக மோட்டார் வாகன பொலிஸார் பலவருடங்களாக பொதுவான வேகத்தை மதிப்பிடும் உபகரணங்களைப் பயன்படுத்தி வந்தனர்.

இதன்மூலம் வேகத்தை மதிப்பீடு செய்துபோதிலும் குறிப்பிட்ட வேகத்திற்கு அப்பால் செல்லும் வாகனங்களுக்கான வாகனத்தின் இலக்கத்தகடுகளிலுள்ள இலக்கத்தை வாகன மாற்றுதிசையில் பிரவேசிக்கும் மத்திய நிலையத்திலுள்ள பொலிஸ் பிரிவில் அறிவிக்கும் நடைமுறையே இதுவரையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில், அதிவேக நெடுஞ்சாலையில் உள்ள பொலிஸ் பிரிவிற்கு வளர்ச்சி கண்ட தொழில்நுட்பத்துடனான வேகத்தை மதிப்பீடு செய்யும்புதிய உபகரணங்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் குறிப்பிட்ட வேகத்திற்கு அப்பால் செல்லும்வாகனத்தைகண்டுபிடிப்பதற்கும், வாகன இலக்கத்தை அந்த சந்தர்ப்பத்திலேயே அடையாளம்கண்டு கொள்ளவும், வேகம் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் மத்திய நிலையத்தின் பொலிஸ் பிரிவிற்கு உடனடியாக வழங்கமுடியும்.

இதற்காக கொண்டுவரப்பட்ட வேகத்தை மதிப்பீடு செய்வாதற்கான உபகரணம் பொலிஸாரினால் பரீட்சார்த்தமாக தற்போது பயன்படுத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பருத்தித்துறை நகர்ப் பகுதியில் அமைந்துள்ள மதுபான சாலை நகரசபையின் அனுமதியின்றி சட்ட விரோதமாக பல வருடங்களாக இயங்கி வருவதைக் கண்டித்து அந்த மதுபான சாலையை அகற்றுமாறு கோரி நேற்றுக் காலை பருத்தித்துறை நகரசபை முன்பாக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது. நேற்றைய ஆர்ப்பாட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பருத் தித்துறை நகர சபை உறப்பினர்கள் மற்றும் பொதுமக்சள் இணைந்து நடத்தியிருந்தனர்.

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கை

ஊர்காவற்றுறை பிரதேச சபை பிரதேச சபையின் எல்லைக்குள்பொதுப்போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கில் கட்டாக்காலிகளாக திரியும் மாடுகள், ஆடுகளை கைப்பற்றுவதற்கு தீர்மானித்துள்ளது.

எனவே மாடுகள், ஆடுகள் வளர்ப்போர் அவற்றை கட்டி வளர்க்கு மாறும் தவறும் பட்சத்தில் எதிர்வரும் 31.ஆம் திகதிக்கு பின்னர் அவை பிரதேச சபையினால் கைப்பற்றப்பட்டு சபைகள் சட்டத்தின்கீழ் 66ம் பிரிவுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரதேச சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# கனிய எரிபொருளுக்கான புவி ஆய்வுப் பணிகளை இலங்கையில் மேற்கொள்ளும் பிரான்ஸ் நிறுவனம்

கொழும்பு, மே 09

இலங்கையின் கிழக்குக் கரையோரப் பிரதேசத்தில் கனிய எரிபொருளுக்கான புவி தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள, பிரான்ஸ் எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

ஆய்வு நடவடிக்கைக்குச் செலவிடப்படும் தொகை இரண்டு கோடி 50 லட்சம் ரூபாவாகும்.

இது தொடர்பான முதற்கட்ட உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது என்றும், இந்த மாத இறுதிக்குள் ஆய்வுப் பணி பூர்த்தி செய்யப்படும் எனவும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் இயக்குநர் வஜிர தஸநாயக்க தெரிவித்துள்ளார்.



## தலவாக்கலை நகர மைதானத்தில் இடம்பெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் மே தினக் கூட்டம்

கொழும்பு, மே 09

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மேதினக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தலவாக்கலை நகர மைதானத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

தலவாக்கலை பஸ் தரிப்பு நிலையத்தில் காலை ஆரம்பமான மேதின ஊர்வலம் பிரதான மேடையை வந்தடைந்ததும் கூட்டம் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் விசேட அதிதியாக அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார கலந்து கொண்டார்.



இந்த ஊர்வலத்தில் அமைச்சர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மயில்வாகனம் திலகராஜா, வேலுகுமார், அ.அரவிந்தகுமார், மாகாண சபை உறுப்பினர்களான ஆர்.ராஜாராம், சோ. ஸ்ரீதரன், சிங் பொன்னையா, சரஸ்வதி சிவகுரு, ராம் உள்ளிட்ட கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

## வருடாந்தம் 3 லட்சம் மக்களுக்கு செஞ்சிலுவை இடர்கால சேவை

கொழும்பு, மே 09

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்தும் மனிதாபிமானமான நடவடிக்கைகளில் ஈடுபடும் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜெகத் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வருடாந்தம் சுமார் 3 லட்சம் மக்களுக்கு தமது இடர்கால சேவையை ஆற்றி வருகின்றது.

கொடுப்பனவு எதனையும் எதிர்பாராத நிலையில், இலங்கை செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் நாடளாவிய ரீதியாக பணியாற்றுகின்றனர்.

குறிப்பாக வெள்ளம், புயல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் உட்பட அவசர காலத்தில் பல்வேறு சேவைகளை, சங்கம் செய்து வருகின்றது.

இதேவேளை, வருடா வருடம் மே 8 ஆம் திகதியினை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை சங்கம் சிறப்பாக கொண்டாடி வருகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை சங்கம் என்பன உலகளாவிய ரீதியாக நேற்று, செஞ்சிலுவை தினத்தைக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி என்னதான் சொன்னாலும் அவருக்கு பதவி மோகம் உள்ளது

கொழும்பு, மே 09

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்னதான் சொன்னாலும், செய்தாலும் அவருக்குப் பதவி மோகம் உள்ளது. அவர் 2020 இலும் ஓய்வு பெறுவதில்லை எனக் கூறியுள்ளார். இவ்வளவு காலமும் செய்த பணிகள் போதாதா.

இதுபோன்ற பணிகள் என்றால் இதன் பிறகும் அவர் வேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.



ரில்வின் சில்வா கூறுகிறார்

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அந்தக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஸ்ரீ ல.சு.க.யின் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்திருந்த கருத்துக் தொடர்பில் கருத்துந் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஜனாதிபதி கதிரையில் யார் அமர்ந்தாலும் அதனைப் போட்டுவிட்டுச் செல்லமாட்டார்கள். இது ஜனநாயகத்துக்குப் பெரிய அடியாகும். நாம் ஆரம்பித்த போராட்டத்தை இலகுவில் கைவிடமாட்டோம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பொலிஸார் முன்னணியில்!

கொழும்பு, மே 09

இலங்கையில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 95 வீதமான சந்தேகநபர்களை கைது செய்ய பொலிஸாருக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்நாட்டில் இடம்பெற்ற குற்றங்களுடன் தொடர்புடைய 75 வீதமான சந்தேகநபர்களை அடையாளம் காணவும் பொலிஸாருக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலகில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பொலிஸாரின் செயற்பாடுகள் அதிகளவு முன்னணியில் இருக்கிறது என்றும் பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

## தலசீமியா நோய் உள்ளவர்களை அடையாளம் காண தேசிய திட்டம்

கொழும்பு, மே 09

பாடசாலை மாணவர்கள் மத்தியில் தலசீமியா நோய் உள்ளவர்களை அடையாளம் காண்பதற்கான தேசிய வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனச் சுகாதார மேம்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

உலக தலசீமியா தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதற்கமைவாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டம் கண்டியில் ஆரம்பிக்கப்படவுள்ளது என அலுவலகத்தின் தொற்றாநோய் பிரிவுப் பணிப்பாளர் விசேட வைத்தியர் பலிய குவதன தெரிவித்துள்ளார்.

## தங்கத்துடன் இரு பெண்கள் கைது

கொழும்பு, மே 09

சிங்கப்பூரிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை தங்கத்துடன் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்களையே கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தப் பெண்களின் பயணப் பைகளிலிருந்து ஒரு கிலோ கிராமுக்கும் அதிகளவான தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா என விமான நிலைய சுங்க பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையின் ஐ.ரி. நிறுவனங்களின் தயாரிப்புகள் கண்காட்சி ஜப்பானில்!

கொழும்பு, மே 09

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஜப்பானில் இடம்பெறவுள்ள ஐ.ரி. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வாரத்தில் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கண்காட்சி கூடமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப 10 நிறுவனங்கள் தமது மென்பொருள் தயாரிப்பு உபகரணங்களை தாம் காட்சிப்படுத்தவும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை தொடர்பாகவும் இங்கு முன்னெடுக்கப்படுகின்றது.

ஜப்பான் டோக்கியோவில் நடைபெறவுள்ள ஐ.ரி. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வாரத்தில் East Hall, E 07- 18 Booth என்ற இடத்தில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்துள்ளது. இந்த கண்காட்சி இன்று முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் சர்வதேச ரீதியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் முன்னிலையிலுள்ள பல நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

இலங்கை வருடந்தோறும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பதுறையின் மூலம் மேற்கொண்டுவரும் ஏற்றுமதிகள் அதிகரித்து வருகின்றன.

கடந்த வருடம் ஏற்றுமதி மூலமாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைத்தது.

2022 ஆம் ஆண்டு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதுடன், இந்த துறையின் மூலம் 200 லட்சம் பேருக்கு நேரடி தொழில் வாய்ப்பு வழங்க எதிர்பார்த்துள்ளது. (க)

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழரின் வாழ்வியலை பெருமிதத்தோடு தூக்கி நிறுத்திய பேரறிவாளன் தொல்காப்பியன்

திங்கள் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி ...

காலப்பெருவெளியில் எத்தனையோ அரசர்களின் எத்துணையோ அதிகாரங்கள் மாண்டழிந்துபோயின. ஆனால், தொல்காப்பியன் இயற்றிய மூன்று அதிகாரங்களும் இன்றுவரை ஒரு மொழியில் ஆட்சி செலுத்துகின்றன.

### இரு திணைகளில் அடங்கும் உலகு

வைப்பு முறையில் எழுத்ததிகாரத்தைத் தொடர்கிறது சொல்லதிகாரம். எழுத்துக்கு முன்பே பிறந்தது சொல். சொல்லை முன்னிலைப்படுத்திப் பொருள் உண்டாவதில்லை. பொருளை முன்னிலைப் படுத்தியே சொல் உண்டாகிறது. பின்னர் அந்தப் பொருளைச் சுட்டும் சொல்தானும் ஒரு பொருளாகிறது. பொருளே சொல்லுக்கு மூலம் என்பதனால் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று அறைந்து சொல்கிறது தொல்காப்பியம். இன்னும் ஆழ்ந்து பார்த்தால் எந்த ஒலி எழுத்துக்குள் அடங்குகிறதோ அதுவே சொல்லாகிறது.

கடலோசை–காற்றோசை–இடியோசை –மழையோசை–பறவையோசை–விலங்கோசை–ஆற்றோசை–அருவி யோசை – இசைக் கருவிகளின் இன் னோசை – முத்தம் – சிரிப்பு –முனகல் – இருமல் இவையெல்லாம் எழுத்துகளில் அடங்குவதில்லை. அதனால், இவை யாவும் ஒலிக்குறிப்புகளாகுமே அன்றிச் சொற்களாகா. எழுத்துக்குள் அடங்கும் ஒலியே சொல்லாகிறது.

இந்தப் பேரண்டத்தை அளக்கும் அத்தனை சொற்களையும் இரண்டே இரண்டு செப்புக்குள் அடைக்கிறார் தொல்காப்பியர். ஒன்று உயர்திணை; மற்றொன்று அஃறிணை.

மனிதர் உயர்திணை; மனிதக் கூட்டம் அல்லாதவை எல்லாம் அஃறிணை. அந்த உயர்திணையை ஆண்பால், பெண் பால், பலர்பால் என்ற மூன்றுக்குள் அடக் கிய தொல்காப்பியர், அஃறிணையை ஒன்றன்பால், பலவின்பால் என்ற இரண்டுக்குள் அடக்குகிறார். இந்தச் சொற்ப குப்பைத் தமிழ் ஞானத்தின் உச்சம் என்றே கொண்டாடலாம். இந்தோ ஐரோப்பிய மொழிகள் பல உயிருள்ளன, உயிரல்லன அனைத்தையும் உயர்திணையாகவே கொண்டு ஆண் – பெண் என்ற இருபிரிவுக்குள் அடக்கி விட்டன.

**கடலோசை – காற்றோசை –இடியோசை – மழையோசை – பறவையோசை –விலங்கோசை – ஆற்றோசை – அருவி யோசை – இசைக் கருவிகளின் இன்னோசை – முத்தம் – சிரிப்பு –முனகல் – இருமல் இவையெல்லாம் எழுத்துகளில் அடங்குவதில்லை. அதனால், இவை யாவும் ஒலிக் குறிப்புகளாகுமே அன்றிச் சொற்களாகா. எழுத்துக் குள் அடங்கும் ஒலியே சொல்லாகிறது.**


சித்திய மொழிக் குழுவினுள் பல எல்லாவற்றையும் அஃறிணையாகவே கொண்டு ஒன்று – பல என்ற இரு பிரிவுக்குள் அடக்கி விட்டன. தமிழ் ஒன்றுதான் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுத்து, அதனையுடைய மக்களை உயர்திணை எனக் கூறியுள்ளது என்று தமது தொல் காப்பிய ஆராய்ச்சியுள் அறிஞர் சி. இலக்குவனார் சுட்டுவது அறிவுலகத்தின் ஆழ்ந்த பார்வைக்கு உள்ளாகிறது.

அந்தச்சொற்களைப் பெயர் – வினை – இடை – உரி என்று நான்காகப் பகுத்தபோது மொழியின் மொத்தக் கட்டமைப்பும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. பொருளை உணர்த்துவது பெயர்ச்சொல். அப்பொருளின் தொழிலைச் சொல்வது வினைச்சொல். பெயருக்கும் வினைக்கும் இடையே மையமாய் இயங்குவது இடைச்சொல். பொருளின் பண்பு கூறுவது உரிச்சொல் என்ற சிவஞான முனிவரின் தெள்ளுரையும் உள்வாங்கி உணரத்தக்கது.

சொல்லதிகாரத்தில் சொல்லப்பட்ட கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்ற ஒன்பது இயல்களி லும் சொல்லும், சொல் இயங்கும் அறிவியலும், மொழியின் இயக்கத்தால் பெறப்படும் விகாரங்களும், விகாரங்களால் பெறப்படும் புது வடிவங்களும், தமிழ் மொழியின் ஒரு சொல் இப்படித்தான் இயங்கும் அல்லது இயங்க வேண்டும் என்ற ஒலிச் சட்டங்களும் வரையறுத்து வழங்கப்பட்டுள்ளன. தொல்காப்பியரின் சொல்லதிகாரத்தை இற்றை நாள் மொழியில் சொல்லறிவியல் என்றும் சொல்லலாம்.

### பொருள் எனும் பேரதிகாரம்

மூன்றாம் அதிகாரத்திற்குப் பொருளதிகாரம் என்று தலைப்பிட்ட தொல்காப்பியரின் சொற்றேர்வு சுட்டுகிறது அவர் பெற்ற பேரறிவை. மனிதன் பொருள்களால் ஆக்கப்பட்டவன் மற்றும் பொருள்களை இயக்குகிறவன்; பொருள்களால் இயக்கப்படுகிறவன். பொருள்களைக் கண்டறிகிறவன்; பொருள்களை உண்டாக்குகிறவன். இறுதியில் தானும் ஒரு பொருளாகி, பின்னர் பொருளற்ற பொருளாகிக் காலப்பொருளுக்குள் மூலப்பொருளாய்க் கலக்கிறவன் அல்லது கரைகிறவன். இந்த உலகப் பொருள்கள் கட்படு பொருளென்றும் கருது பொருளென்றும் இருவகைப்படும். அவற்றை மூவகைப் படுத்தி முதற்பொருள் – கருப்பொருள் – உரிப் பொருள் என்று பகுத்தறிவால் பகுத்துப் பகுத்து வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர்.




முதற்பொருள் எதுவென்று முன்மொழிந்தது தொல்காப் பியரின் மூளைப் பழம் பிழிந்த சாறாகும். உயிர்த்தோற்றத்தின் மூலமாகிய இந்த நிலமென்ற உருவமும், இந்த நிலவியல் வாழ்வை இயக்குகின்ற காலம் என்ற அருவமும் முதற்பொருள் என்பது தொல்காப்பியரின் அசைக்க முடியாத அறிவின் ஆணையாகும். முதலெனப்படுவது நிலம்பொழுதிரண்டின் / இயல்பென மொழிப இயல் புணர்ந்தோரே என்பது எங்கள் முன்னோன் எழுதிய முன்னறிவியல்.

ஐன்ஸ்டீன் முதலாக ஸ்டீபன் ஹாக்கிங்ஸ் ஈறாக விளங்கிய விஞ்ஞானிகளும் 'காலமும் வெளியும்' (Time and Space) என்று தேடிக் கண்டறிந்த திரவியத்தை அன்றே சுட்டிய பேரறிவு பெருமைக்குரியது.

முதற்பொருள்களில் கருக்கொள்வனவெல்லாம் கருப்பொருள்கள். அந்தக் கருப்பொருள்களின் ஒழுகலாறுகள் உரிப்பொருள்கள் என்று வகைப்படுத்தியதில் மொத்த உலகத்தையும் இந்த மூன்று பகுப்புக்குள் அடக்கி முடிக்கிறார் அறிஞர் பெருமான்.

அகத்திணையியல் – புறத்திணையியல் – களவியல் – கற்பியல் – பொருளியல் – மெய்ப்பாட்டியல் – உவமவியல் – செய்யுளியல் – மரபியல் என்ற பொருளதிகாரத்தின் 9 இயல்களிலும் தமிழர்களின் காதலும் வீரமும், நிலமும் பொழுதும், வாழ்வும் தொழிலும், உணவும் உணர் வும், கலையும் கல்வியும், வழக்கமும் ஒழுக்கமும், உறவும் பிரிவும், அறமும் மறமும், மரபும் மாற்றமும், யாப்பும் அணியுமென எல்லாப் பொருளையும் இலக்கணப் படுத்தியிருக்கிறார் தொல்காப்பியப் பேராசான்.

### விஞ்ஞானத்தோடு முன்னின்றவன்

உலகத் தோற்றம் குறித்து இதுவரை இரண்டு கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்று மதக்கருத்து; இன்னொன்று அறிவியல் கருத்து. இந்த அண்டமே கடவுளின் கைவினை என்ற கருத்தையே எல்லா மதங்களும் எழுதிப் போகின்றன. ஆனால், கரிமக்கொள்கை என்ற விஞ்ஞானம் இந்த பூமியின் தோற்றம் குறித்து அதுவரையில் இருந்த எல்லா நம்பிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அறிவியல் எல்லைக்குள் அண்டத்தை அளந்தது தொல்காப்பியம்.

நிலம் தீ நீர் வளி விசும்பொடு / ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் (பொருளதிகாரம் மரபியல் 86) என்று வரையறுக்கிறது தொல்காப்பியம். நிலம் – நீர் – தீ – வளி – வெளியென்ற ஐந்தின் கலவைதான் இந்த மண்கோள் என்று முரண்பாடில்லாத கருத்தை முன்மொழிகிறது. இந்த பூமி எப்படிப் படைக்கப்பட்டது என்ற மதம் சார் கருத்தியலில் தோயாமல், எதனால் படைக்கப்பட்டது என்ற மெய்ம்மையோடு மட்டும் நின்றுகொண்டதால் தொல்காப்பியத்தை எந்த நூற்றாண்டு அறிவியலும் இடறித்தள்ளவியலாது.

தொல்காப்பியர் எந்த மதத்துக்குள்ளும் தன்னை இணைத்துக்கொள்ளவில்லை. ஐவகை நிலம் காக்கத் தங்களைக் களப்பலியிட்டுக்கொண்ட முன்னோர்களுக்கு நட்ட நடுகல்லையே தமிழர்கள் தெய்வமென்று போற்றி வழிபட்டார்கள் என்பதையே தொல்காப்பிய நூற்பா நுதலிப் போகிறது. காட்சி, கால்கோள் நீர்ப்படை நடுகல் / சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று இரு மூன்று மரபில் கல்லொடு புணர (பொருளதிகாரம் : புறத்திணையியல் 5) என்னும் தொல்காப்பியம் நடுகல் வழிபாடுதான் தமிழர்களின் ஆதிவழிபாடு என்று சான்றளிக்கிறது. அதுவே, குலதெய்வ வழிபாடாகி இன்றுவரை நாட்டார் சமயமாய் விளங்குகிறது.

### தொல்காப்பியத்தை எப்படி மதிப்பிடுவது?

மொழி, இலக்கணக் கோட்டுக்குள் இயங்கவும், அதன் ஒலி தடம் புரளாமல் பயணிக்கவும், தமிழன் ஆதிகுடி என்பதற்கு அடையாளம் காட்டவும், மொழிக்கு அறிவியலையும் வாழ்வுக்கு அறவியலையும் அடிப்படையாகக் கொண்டது தமிழ்ப் பழங்குடி என்பதற்குச் சான்று சொல்லவும், தமிழர்க்கு உச்சமாகவும் எச்சமாகவும் உள்ள தொல்லாவணமே தொல்காப்பியம் என்று மதிப்பிடலாம். தொல்காப்பியத்தைக் கட்டிக்காப்பது அரசாங்கத்தின் –அறிவுலகத்தின் கடமை மட்டுமன்று; தமிழ் மொழி பேசும் – எழுதும் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

– வைரமுத்து, கவிஞர்.

மகத்தான தமிழ் ஆளுமைகளை இளைய சமூகத்திடம் கொண்டுசேர்க்கும் விதமாக கவிஞர் வைரமுத்து அரங்கேற்றிவரும் 'தமிழாற்றுப்படை' கட்டுரைத் தொடரில் மே 2 அன்று அவர் வாசித்த கட்டுரையின் சுருக்கப்பட்ட வடிவம்.

---



கவிஞர் த.நாகேஸ்வரனின் மணி விழாவை முன்னிட்டு அவரின் சார்பாக சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு நிதியும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற 30 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு தொகையும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. கல்வி ஊக்குவிப்பு தொகையை வடமாகாண சபை உறுப்பினர் சயந்தன் மாணவர் ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். (இ21)

---

## நன்னீர் இறால் வளர்ப்பு கிழக்கில்

கிழக்கு மாகாணத்தில் நன்னீர் இறால் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான விசேட வேலைத் திட்டமொன்றைக் கடற்றொழில், நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள இனங்காணப்பட்ட நன்னீர் நிலைகளில் இறால் வளர்ப்பை அதிகரிப்பதற்காக நீரியல் வள அமைச்சு சுமார் 300 லட்சம் ரூபாவைச் செலவிட உள்ளதாக அமைச்சின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## சம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸல்' என்ற விடயமும் அடங்கியிருந்தது.

தமது உரையின் இடையே நல்லிணக்கத்தை எட்டுவதற்கு மாகாண சபைகளைப் பலப்படுத்துவது குறித்தும் அவர் கருத்து வெளியிட்டார்.

அவரின் உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

மக்களின் எதிர்பார்ப்புக்களைநிறைவேற்றும், உண்மையான மக்கள் நேய செயற்திட்டங்களின் நிபந்தனைகளாக பின்வரும் 15 விடயங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

1. மக்களின் பொருளாதார சுபீட்சத்தை உறுதிப்படுத்தல்.

2. வறுமையை இல்லாதொழித்தல்.

3. இளைஞர்களுக்கு புதிய தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.

4. அரச சேவையாளர்களுக்கு திருப்திகரமான சூழலை ஏற்படுத்தல்.

5. பொலிஸ் மற்றும் முப்படையினரின் தன்னம்பிக்கையையும் உயர் குறிக்கோள்களையும் உறுதிப்படுத்தல்.

6. சட்டம், அதிகாரம், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் பேச்சுச் சுதந்திரத்தை சமூகத்தில் உறுதி செய்தல்.

7. சம உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்ளல்.

8. முஸ்லிம் மக்களின் நலன் மற்றும் சமூக, கலாசார தேவைகளை உறுதிசெய்தல்.

9. மலையகதமிழ் மக்களின் பொருளாதார, சமூக நிலையை மேம்படுத்தல்.

10. நாட்டின் பெரும்பான்மை சமூகமான சிங்கள மக்களின் கலாசார உரிமைகளைப் பலப்படுத்தி, உறுதி செய்து, தேசத்தின் அடையாளத்தை வலுப்படுத்தல்.

11. பெண்களைப் பலப்படுத்துதலும் அவர்களது நேரடி பங்களிப்பும்.

12. சமூகத்திலுள்ள விசேட தேவைகளை உடைய பிரஜைகள் தொடர்பாக உணர்வுபூர்வமாக செயற்படல்.

13. நாட்டின் இயற்கைச் சூழலை பாதுகாத்து, தேசிய வளங்களை எதிர்கால சந்தியினருக்கும் பெற்றுத்தரக்கூடிய பேண்தகு அபிவிருத்தியை உறுதிசெய்தல்.

14. சமய நம்பிக்கைகள், எமது மரபுரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் சகல சமய பெரியார்களையும் மத குருமார்களையும் மகா சங்கத்தினரையும் பேண்தகு முறையில் போஷித்தல்.

15. அரசியல் பலப் பரீட்சைக்கு அப்பால் சென்று நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக சகல இன, மத, அரசியல், கட்சிகளையும் ஒன்றிணைத்து கட்டி யெழுப்பப்படும் தேசிய பேண்தகு அபிவிருத்தி இலக்கை உருவாக்குதல்.

**விமர்சனங்கள்**
**குற்றச்சாட்டுக்கள்**

இந்த அரசாங்கம் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் பல்வேறு விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கின்றனர். அவ்வனைத்து விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசாங்கம் என்ற வகையில் நாம் மிகுந்த நேர்மையோடு அவை தொடர்பில் கவனம் செலுத்துகிறோம், அவை தொடர்பாக நாம் சுய விமர்சனத்திலும் ஈடுபட்டுள்ளோம் என்பதை தெரிவிக்க வேண்டும்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் சுயாதீனத்தன்மையை ஏற்கனவே நாம் உறுதி செய்துள்ளோம். ஆயினும் இன்னும் சுதந்திரமாக உள்ள – பாரியளவிலான மோசடியாளர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை தொடர்பாக விமர்சனங்கள் காணப்படுகின்றன.

ஊழலை முற்றாக இல்லாதொழித்து சகல ஊழல்வாதிகளுக்கு எதிராகவும் சட்டத்தை நடைமுறைப்படுத்துதலே எமது ஏகோபித்த எதிர்பார்ப்பாகும். அதுவே ஒட்டுமொத்த மக்களின் பிரார்த்தனையுமாகும்.

**தேசிய அரசு**

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்தியுள்ளமை தொடர்பான குற்றச்சாட்டே எம்மீது சுமத்தப்படும் மற்றுமொரு குற்றச்சாட்டு ஆகும். நாட்டிற்கு எதிராக உள்ள சவால்களை கருத்திற் கொள்ளும்போது சகல கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டிற்காக முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். பாரியதொரு கடன் சுமை எம் முன்னே உள்ளது. பயனற்ற வீண்விரயங்கள் செய்யப்பட்ட யுகத்தின் இழப்புகளையும் நாம் நீக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் நாடு மீண்டும் முன்னேற்றமடைவதற்குள்ள இறுதி சந்தர்ப்பம் இதுவே என்பதை கருத்திற்கொண்டு சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

**பழிவாங்கல் அற்ற**
**புதிய சூழல்**

வைராக்கியம், குரோதம் நிறைந்த நாட்டில் ஆட்சி மாற்றங்களின்போது இடம்பெறும் பாரியளவிலான அரசியல் பழிவாங்கல்கள் இல்லாத மற்றும் தோல்வியடைந்தவரும் வெற்றியாளரும் அபிமானத்தோடு வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டியதும் இன்றைய அரசியல் கடமையாகுமென நான் கருதுகின்றேன்.

இந்த அரசாங்கத்தை அமைக்கும்போது எமக்கு எதிராக பல சவால்கள் காணப்பட்டன. ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆதிக்கத்தையும் மீண்டும் நிலைநாட்டுவதே அவற்றுள் முதலாவதாகும். இனங்களுக்கிடையே நம்பிக்கையையும் ஒற்றுமையையும் உறுதி செய்தல் இரண்டாவதாகும். பாரிய கடன் சுமையில் சிக்கியிருந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புதல், நாம் இழந்திருந்த சர்வதேசத்தின் நன்மதிப்பை பெற்றுக் கொள்ளல் என்பனவும் அவற்றுள் உள்ளடங்குகின்றன. எவ்வாறான குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோதிலும் இவ் அனைத்து துறைகளிலும் வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள கடந்த மூன்று வருட காலத்திற்குள் எமது அரசாங்கத்தினால் முடிந்துள்ளது. அதே போன்று இவ்வனைத்து துறைகளிலும் மேலும் நிறைவேற்றப்பட வேண்டிய பல விடயங்களும் காணப்படுகின்றன.

**பொருளாதாரம்**

பலமான, நவீன இலங்கையை கட்டியெழுப்புவதற்கு அத்தியாவசியமான முயற்சியாண்மை முகாமைத்துவத்தில் நாட்டை ஈடுபடுத்தலும் தேசிய வர்த்தக சமூகத்திற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான கொள்கைகளை உருவாக்குதலும் அவசியமாகும்.

அத்தோடு எமக்கு பழக்கப்பட்ட மோசடி அரசியலை தோற்கடித்து சமூகத்திற்கு நன்மை பயக்கும் மக்கள் நேய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக பாடுபட வேண்டியுள்ளது. அனைத்து குடிமகனுக்கும் வெற்றிபெறக்கூடிய பொருளாதாரமே தேவைப்படுகின்றது.

இங்கே, குறிப்பாக எமது நாட்டின் விவசாய மக்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். மூன்று வருடங்களாக தகுந்த மழையின்மையால் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கான விவசாய துறையின் பங்களிப்பும் வீழ்ச்சி கண்டுள்ளது. அதிக மழை மற்றும் நீண்டகால வரட்சி ஆகியன பூகோள ரீதியில் பாதிப்பினை ஏற்படுத்தும் காலநிலை மாற்றங்களின் விளைவாகவே இருக்கின்றன.

**நல்லிணக்கமே**
**நாட்டின் அடித்தளம்**

நிலையான நாட்டின் அடித்தளம் தேசிய நல்லிணக்கமே ஆகும். உண்மையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்மானங்களை இயற்றத்தக்க கட்டமைப்பினை அறிமுகப்படுத்த வேண்டும். அந்த நோக்கை வெற்றி கொள்வதற்கு தற்போது செயலில் இருந்துவரும் மாகாண சபை முறைமையை மேலும் பலப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என நான் நம்புகிறேன்.

எவ்வாறான விமர்சனங்கள் எழுந்த போதிலும் வடக்கு கிழக்கு மக்களின் பொறுமையிழப்பினை நிரந்தரமாக சமரசப்படுத்த வேண்டுமாயின் மக்களின் விருப்பத்தையும் இணக்கப்பாட்டையும் பெற்ற அரசியல் வேலைத்திட்டமொன்றினை ஆரம்பித்தல் வேண்டும். பௌதீக ரீதியில் நாம் பயங்கரவாதிகளை தோற்கடித்த போதிலும் அவர்களின் கொள்கையினை முழுமையாக தோல்வியுறச் செய்வதற்கு இன்னும் முடியாது போயிருக்கின்றது.

**சர்வதேச ஒத்துழைப்பு**

கடந்த மூன்றரை வருடங்களாக சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்பை பெற்று அந்தக் கொள்கையினை தோல்வியுறச் செய்வதற்கே நான் முயற்சித்து வந்தேன்.

யுத்தத்தின் பின்னரான நிலைமைகளை கையாள்வதென்பது மிகுந்த சவாலாகும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்ற சமயம் அச்சவாலுக்கான விடைதேடும் காரியம் ஏழு வருடங்களால் தாமதமாகி இருந்ததனால் அச்சவால் மேலும் இக்கட்டான சூழ்நிலைக்கு உள்ளாகியிருந்தது. மூன்று தசாப்தங்களாக சமூகத்தில் வேரூன்றியிருந்த போர் மனநிலையினை அகற்றி சகவாழ்வினை ஏற்படுத்துவதற்கு இன்னும் எம்மால் பாரிய வேலைகளை செய்யவேண்டி இருக்கின்றது. ஓர் அரசாங்கத்தினால் மாத்திரம் அதனை செய்வது கடினமாகும். அதற்கு சமூகத்தின் அனைத்து தரப்புகளினதும் நேரடிப் பங்களிப்பு கட்டாயமாகத் தேவைப்படுகின்றது. அதனால் அந்த நோக்கை அடைவதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவோமென அனைத்து தரப்புகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

**தேசியப் பாதுகாப்பு**

தேசிய பாதுகாப்பு மீதான எமது கவனமும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. எமது பூமியின் பாதுகாப்பு, மனிதர்களின் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு ஆகியன இங்கு முக்கிய துறைகளாக அமைகின்றன. பூமியின் பாதுகாப்பின் கீழ் கடல் பரப்பு மீதும், மனிதப் பாதுகாப்பின் கீழ் உணவு மற்றும் நீர்ப் பாதுகாப்பு ஆகியனவும் முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக இந்து சமுத்திரத்தின் கேந்திர ஸ்தானத்தில் இலங்கை அமைந்திருப்பதால் எமக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. அதே போல் நாம் எதிர்கால நோக்குடன் மிக நுட்பமாக கவனத்தில் கொள்ள வேண்டிய பாதுகாப்பு துறை சவால்களும் இருக்கவே செய்கின்றன என்பதை நாம் எமது கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஆதலால் சர்வதேச உறவுகளைப் பேணுவதில் நடுநிலையான, நட்பு ரீதியிலான கொள்கையின் முக்கியத்துவத்தை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். எமது நட்பு ரீதியிலான வெளிநாட்டுக் கொள்கையே எமக்கு மிகுந்த பலனைப் பெற்றுத் தந்திருக்கின்றது. உலகில் அனைத்து நாடுகளைப் போன்றே ஐக்கிய நாடுகள் சபை முதலான சர்வதேச அமைப்புகளுடன் நாம் மிகுந்த நட்பையும் தோழமையையும் உருவாக்கிக்கொள்வதற்கு வேறொரு சந்தர்ப்பம் இல்லை என்றே கூறலாம். – என்றார்.

## தெல்லிப்பழையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுத்தத் தவறும் பொலிஸாரின் செயலின்மையால் மக்கள் விசனமடைந்துள்ளனர்.

இரு கும்பல்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டால், தெல்லிப்பழை எட்டாம் கட்டைப் பகுதியில், வாள்கள், இரும்புக் கம்பிகள் என்பவற்றுடன் சுமார் 20 பேர், 10 மோட்டார் சைக்கிள்களில் நேற்று முன்தினம் இரவிரவாக அந்தப் பகுதியில் நடமாடியமையால் பொது மக்களிடையே பெரும் அச்ச நிலை தோன்றியிருந்தது.

மாற்றுக் கும்பலைச் சேர்ந்த ஒருவரை, இன்னொரு கும்பல் வெட்டுவதற்குத் துரத்தியதாகவும், அவர் தப்பியோடிப் பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தமையால் உயிர் தப்பினார் எனவும் கூறப்படுகின்றது.

பின்னர் இருதரப்பினரையும் தெல்லிப்பழைப் பொலிஸார் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர் என்றும், அவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மக்கள் விசனமடைந்துள்ளனர்.

வாள்வெட்டுக் கும்பலின் பிரதானசூத்திரதாரி கைக்குண்டு ஒன்றை வைத்திருந்தமைக்காகக் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்றும், சமய அமைப்பு ஒன்றில் அங்கம் வகிப்பவர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முறைப்பாடு கிடைத்தது. விசாரணைகளின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் தன்னை ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எனக் கூறியே மோசடியில் ஈடுபட்டுள்ளார்." – என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்டது.

அமைச்சரவை கடந்த வாரம் மறுசீரமைக்கப்பட்ட நிலையில் அதன் முதலாவது கூட்டம் இன்று காலை 10 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறுகின்றது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உட்பட பல நூற்றுக் கணக்கானோர் மீளப் பதிவு செய்தனர். அதனால் நாடு முழுவதும் பெரும் பரபரப்பாக இந்த விடயம் பரவியது.

இந்த விடயத்தை அறிந்த ஜனாதிபதியின் செயலாளர், நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசன் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் அம்பிகா சிறிதரன் ஆகியோர் செய்தியாளருடன் தொடர்பு கொண்டு, முழுமையான தகவலைப் பெற்றனர். அத்துடன், சம்பந்தப்பட்ட ஊழியர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார் என்ற உறுதி மொழியையும் வழங்கினர்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு கோட்டையிலிருந்து புறப்பட்டு யாழ்.நோக்கி வந்த ரயிலில் இடம்பெற்றது. சாவகச்சேரி ரயில் நிலையத்திலேயே சம்பவம் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மனித வுரிமை ஆணைக்குழுவிலும், யாழ்ப்பாண ரயில் நிலைய அதிபரிடமும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த குடும்பப் பெண்ணொருவர் வவுனியா ரயில் நிலையத்தில் இருந்து ரயிலில் ஏறினார். இதன்போது அந்த ரயிலில் பெருமளவில் சனநடமாட்டம் இல்லாமையால் அதனைப் பயன்படுத்திக் கொண்ட ரயிலில் பணியாற்றும் சிட்டை பரீட்சிக்கும் ஊழியர் ஒருவர், அந்தப் பெண்ணுடன் தகாத முறையில் நடக்க முயற்சித்துள்ளார்.

இதனை அவதானித்த அங்கு நின்றவர்கள் அந்த ஊழியரிடம் சென்று ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள் எனக் கேட்டனர். அவ்வாறு கேட்டவர்களை அந்த ஊழியர் தாக்க முயற்சித்தார்.

மேலும் தமிழர்கள் கீழ்த்தரமானவர்கள் என்று தகாத வார்த்தைகளால் அடிக்கடி பேசிக்கொண்டிருந்தார். இதன்போது அங்கு சென்ற ஊடகவியாலாளர் ஒருவரையும் அவர் தாக்க முயற்சித்தார். இந்த சம்பவம் சாவகச்சேரி ரயில் நிலையத்தை அண்மித்தபோது நடந்து கொண்டிருந்தது.

நீங்கள் தமிழ் என்றால் என்னை ஒன்றும் செய்ய முடியாது, பொலிஸாராலும் யாராலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. இங்கு நான்தான் பெரியவன்என்று மிரட்டும் தொனியில் அந்த ஊழியர் அனைவரையும் மிரட்டினார்.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்று கொண்டிருந்தபோது, ரயிலில் பணியாற்றுதம் பதவிநிலை அலுவலர் எவரும் சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை. இதனால் பயணித்த அனைவரும் பயத்தில் உறைந்திருந்தார்கள்.

ரயில் யாழ்.பிரதான ரயில் நிலையத்தை வந்ததடைந்ததும், சம்பவம் தொடர்பில் யாழ்.ரயில் நிலைய அதிபருக்கு அந்தப் பெண்ணால் முறைப்பாடு வழங்கப்பட்டது. சம்பவத்துக்கான ஆதாரமாகக் காணொலியும் வழங்கப்பட்டது.

இதனை அடுத்து இது தொடர்பில் தான் உயர் அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் முறைப்பாடு ஒன்றை செய்வதாக ரயில் நிலைய அதிபர் கூறினார்.

இதேவேளை இந்த அச்சுறுத்தல் மற்றும் தகாத முறையில் நடந்து கொண்டமை பற்றி இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவிலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 11 ஆம் பக்கத்தில்) (ஐ)



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 32

தரம்-5

பகுதி - I

5) பிள்ளைகளின் கூட்டம்

இருக்கும் இடம்


பூக்கள் ஆயிரம்

மலர்ந்த .............

1. தளம் 2. களம் 3. குளம்

❖ தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க

6)



❖ பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தை தெரிவு செய்க

7) வண்ணத்துப்பூச்சி ரோசா மலரில் நீரைக் குடித்தது
1. வண்ணத்துப்பூச்சி என்பதற்குப் பதிலாகக் 'குளவி' என்பதை இடுதல்
2. ரோசா என்பதற்குப் பதிலாகத் 'தாமரை' என்பதை இடுதல்
3. நீர் என்பதற்குப் பதிலாகத் 'தேனை' இடுதல்

8) பிள்ளை வீதியில் பாடம் படிக்கிறது
1. பிள்ளை என்பதற்குப் பதிலாக 'மகன்' என்பதை இடுதல்
2. வீதியில் என்பதற்குப் பதிலாக 'அறையில்'என்பதை இடுதல்
3. பாடம் படிக்கிறது என்பதற்குப் பதிலாக 'ஆரம்பிக்கின்றது' என்பதை இடுதல்

9) 'எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினால் போல்'
1. சிக்கலைத் தீர்க்க உதவுதல்
2. மேலும் கோபமூட்டச் செய்தல்
3. வறியவர்களுக்குப் பண உதவி செய்தல்

10) 'ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போல்'
1. செய்யமுடியாத செயலைச் செய்ய முயலுதல்
2. மிக ஊக்கத்துடனும் தைரியத்துடனும் செயற்படுதல்
3. பெரிய வேலையைச் செய்யத் தொடங்குதல்

### வினாத்தாள் 30இற்கான விடைகள் பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 9) 3 | 17) 2 | 25) 2 | 33) 3 |
| 2) 1 | 10) 1 | 18) 3 | 26) 2 | 34) 2 |
| 3) 1 | 11) 2 | 19) 1 | 27) 2 | 35) 1 |
| 4) 3 | 12) 2 | 20) 3 | 28) 1 | 36) 3 |
| 5) 3 | 13) 3 | 21) 3 | 29) 1 | 37) 3 |
| 6) 3 | 14) 1 | 22) 3 | 30) 2 | 38) 2 |
| 7) 2 | 15) 1 | 23) 1 | 31) 1 | 39) 2 |
| 8) 1 | 16) 3 | 24) 2 | 32) 2 | 40) 2 |

### வினாத்தாள் 30 இற்கான விடைகள் பகுதி II

1. I. கூடையில் இட்டுஅல்லதுகிடங்கில் போட்டுஅகற்றவேண்டும்
II. நுளம்புகளால்
III. வீசாமல்
IV. கொடிய
V. குப்பை கூளம்
VI. கண்டகண்ட

2.
I. பட்டினி
II. வழிப்போக்கன்

3.
I. ஊட்டியது
II. நடந்தது
III.நடைபெற்றது

4.கணவனை இழந்த மனைவியை விதவை என்று கூறினாள்.

5.
I. மக்கட்பேறு
II. இருநூறு

6. மண்ணாய்ப் போகும்

7.அதிகாலையில் சூரியன் உதிக்கும் முன் எழுவது நல்லபழக்கம் ஆகும்

8.
I. மேலோட்டமாகப் படித்தல்
II.இணைபிரியாத நட்பு

9. நேற்று, இரவு

10. மடைத் தலையில் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்

11. I. Umbrella
II. Television

12. I.are
II.have

13. I.Window
II. sentence


14. What do you want ?

15. கேளுங்கள்

16. தேங்காய் எண்ணெய் எவ்வளவு?

17. பொருத்தமான வாக்கியம்

18.



19. 12.8
20.945 , 1045 , 3021 , 9622
21. 1
22. 653 cm
23. 500 g
24. 16
26. ரூபாய் 60
27. 15:50
28. 1 L 900 ml
29. ரூபாய் 300
30. 125
31. 3
32. 4
33. 1
34. 2
35. 1
36. 4
37. 2
38. 1
39. 2
40. 3
41. 2
42. 3
43. 1
44. 4
45. 4
46. 4
47. 3
48. 1
49. 1
50. 1





## எனது செல்லப் பிராணி



★ எனது செல்லப் பிராணி நாய் ஆகும்.
★ எனது செல்லப் பிராணியின் பெயர் ...
★ எனது செல்லப் பிராணியின் நிறம் கறுப்பு ... மண்ணிறம் ஆகும்.
★ எனது செல்லப் பிராணி வீட்டைக் காக்கும்.
★ அது என்னுடன் பந்து விளையாடும்.
★ அது மிகவும் விரும்பி உண்பது மாமிசமே.

திலீப். திலக்ஷன். 4.C
யா/கொக்குவில் இந்து ஆ.பா.



## ஆப்பில் மாட்டிய குரங்கு

ஒரு விறகு வெட்டி இருந்தான். காட்டுப் பகுதிக்கு ஒட்டி இருந்தது அவன் குடிசை.

மரங்களை வெட்டிவருவது, கோடரியால்பிளப்பது, சிறு துண்டுகளாக்கி பக்கத்துக்கு கிராமங்களுக்கு கொண்டு விற்பது. அதை கொண்டு குடும்பம் நடத்துவது, அவனது அன்றாட வேலை.

அன்று அப்படிதான் ஒரு பெரிய அடிமரத்துண்டை கோடரியால் பிளக்க ஆரம்பித்தான்.

களைப்பு வந்தது. அடிமரத்தை பாதியளவு பிளந்திருந்ததால் அப்பிளவுக்கு இடையில் ஆப்பு போல் ஒரு மரச்சக்கையை வைத்து விட்டு ஓய்வெடுக்கச் சென்றான்.

பக்கத்திலேயே ஒரு பெரிய மரம் இருந்தது. அம்மரத்தின் ஒரு கிளையில் இருந்த அக்குரங்கு ஒன்று மரம் வெட்டியின் செயலைப் பார்த்துக் கொண்டிருந்தது.

மரம் வெட்டி அப்பால் நகர்ந்ததும் அக்குரங்கு உடனே இறங்கி வந்தது.

அம்மரத்துண்டின் பிளவு பட்ட பகுதியில் வால் முழுவதும் விட்ட நிலையில் அதன்மேல் அமர்ந்து கொண்டது.

அது குரங்கு அல்லவா! அதற்கே உரிய குரங்கு வேலையைச் செய்ய ஆரம்பித்தது; ஆப்பாகச் சொருகி இருந்த மரத் துண்டை ஆட்டி ஆட்டி எடுக்க ஆரம்பித்தது.

ஒரு ஆட்டு; இரண்டு ஆட்டு, மூன்று ஆட்டு... சில ஆட்டுகள்!

படுக்கென்று அந்த ஆப்பு துண்டு வந்துவிட்டது. சடக்கென்று பிளவுபட்டப் பகுதியின் இடைவெளி குறைந்துவிட்டது.

அத்துடனா?

பிளவுக்குள் தொங்கி இருந்த வால் நசுங்க வீல்..! வீல்...!! என்று அலறியது.

ஓய்வாக உள்ளே இருந்த மரம்வெட்டி அலறல் கேட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தான். பார்த்தால் குரங்கு பாவம் செத்துவிட்டது.

இத்தனை நாள் இல்லாமல் எங்கிருந்து வந்துத் தொலைந்தது இன்று சாவதற்கென்றே என்ற முணுமுணுப்புடன் குரங்கின் உடலை அப்புறப்படுத்தினான் அவன்.

குரங்கின் அசட்டுச் செயல் அதற்கே அழிவைத் தந்துவிட்டது.

## 08 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# மஹிந்த தலைமைத்துவத்தின் கீழ் அரசு செயற்படுவதையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர் என்கிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, மே 09

ஜனாதிபதியும், பிரதமரும் பகல் கனவு கண்டு வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் அரசு செயற்படுவதையே அனைவரும் எதிர்ப்பார்க்கின்றனர் எனப் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2020 ஆம் ஆண்டிற்கு பிறகும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவியை தொடர விரும்பினாலும், நாட்டு மக்கள் அதனை அனுமதிக்க மாட்டார்கள். ஏனென்றால், தேசிய அரசை நாட்டு மக்கள் முழுமையாக நிராகரித்து விட்டனர்.

தேசிய அரசு 2020 ஆம் ஆண்டிற்கு பிறகும் தொடரும் என ஜனாதிபதியும், பிரதமரும் பகல்கனவு கண்டுவருகின்றனர். தற்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் அரசு செயற்படுவதையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

தேசிய அரசு தொடர்ந்து நாட்டை நிர்வகிக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுவது வேடிக்கையாகவே உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2020 ஆம் ஆண்டு போட்டியிட்டால் பெரும் தோல்வியை எதிர்கொள்ள நேரிடும். ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியல் நிலைமைகளும் பரிதாபத்திற்குரியதாகவே தற்போது காணப்படுகின்றது.



ஐக்கியதேசியக்கட்சியின் பொது வேட்பாளராக 2015ஆம் ஆண்டு போட்டியிட்டதைப் போன்று மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிடலாம். ஆனால் அது எந்தளவிற்கு சாத்தியப்படும் என்பது சந்தேகத்திற்கிடமாகவே காணப்படுகின்றது.

இரு கட்சிகளுக்குமிடையில் தற்போது ஒருமித்த இணக்கப்பாடற்ற தன்மைகளே காணப்படுகின்றன. தேசிய அரசை தொடர்ந்து முன்னெடுத்து செல்வது தொடர்பில் 5 பேர் உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து அதன் தலைமைத்துவ பொறுப்புக்களை அமைச்சர் சரத் அமுனுகமவிடம் கையளித்தார்.

தேசிய அரசு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் என ஜனாதிபதியும், பிரதமரும் பகல்கனவு கண்டுவருகின்றனர். முறையற்ற அரசின் மூன்று வருட கால நிர்வாகத்தின் காரணமாக நாட்டு மக்கள் பல அத்தியாவசிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர். மீண்டும் அவை தொடருவதை மக்கள் விரும்ப மாட்டார்கள்.

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இந்த அரசை மக்கள் முழுமையாக நிராகரித்து விட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமைத்துவத்தின் கீழ் மீண்டும் நாடு செயற்படுவதையே அனைவரும் விரும்புகின்றனர். இதற்கான ஆரம்ப கட்டமே உள்ளூராட்சி மன்ற தேர்தலின் முடிவுகள். இந்த அரசின் பதவிக் காலம் குறுகியதாகவே காணப்படுகின்றது.

இந்தக் காலக்கட்டத்திற்குள் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ள முடியாது. 2020 ஆம் ஆண்டுக்குப் பிறகே நாட்டில் முழுமையான மாற்றம் தோற்றம் பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பண்டாரவளை தீ விபத்து: சந்தேகநபர் கைது!

கொழும்பு, மே 09

பண்டாரவளை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் காப்பகத்தில் அண்மையில் இடம்பெற்ற தீ சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபரை மஹரகமவில் வைத்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பண்டாரவளை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் காப்பகத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் அங்கு வைக்கப்பட்டிருந்த வழக்குகள் தொடர்பான பல ஆவணங்கள் தீயில் எரிந்தமை குறிப்பிடத்தக்கது.

(க)

## வறட்சியால் யாழில் விவசாயிகள் பாதிப்பு!



யாழ்ப்பாணம், மே 09


வறட்சியான காலநிலை தொடர்வதால் யாழில் வெங்காயம் உட்பட்ட 1980 ஹெக்டேயர் பயிர்ச் செய்கை பரப்பு முற்றாக அழிவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

இந்த நிலையில், இளவாலை, மாதகல் மற்றும் உறும்பிராய் பகுதிகளில் வெங்காய பயிர்ச் செய்கை பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், தமது பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தம்மால் பெறப்பட்ட வங்கிக் கடன்களை செலுத்துவதற்கு நிவாரணங்கள் பெற்றுத்தருமாறு அந்த பகுதி விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேலும், விவசாயிகள் விளை நிலங்களில், கடந்த வருடம் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர் எனவும் உரிய காலத்தில் விதை உருளைக்கிழங்குகள் கிடைக்காத காரணத்தினால் இந்த வருடம் மாற்றுப் பயிர்ச்செய்கையாக வெங்காயத்தை பயிரிட்டனர் என குறிப்பிடப்படுகின்றது.

## இராணுவ சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம்



கொழும்பு, மே 09

இலங்கை இராணுவத்திற்கு தகுதியுடைய ஆண்கள் மற்றும் மகளிர் அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்காக இராணுவத் தலைமையகத்தால் விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பத்திற்கு ஏற்ற தொழில் ரீதியில் தகுதி பெற்ற வைத்திய அதிகாரிகள், மருத்துவ ஆலோசகர்கள், பல் மருத்துவர்கள் மற்றும் பொறியியலாளர்கள் தகவல் தொழில்நுட்ப பயிற்சியாளர்கள் மற்றும் இசைத் துறையில் பயிற்சி பெற்றவர்கள், பான்ட் வாத்தியர்கள், கணக்கு அதிகாரிகள் மற்றும் மேலதிக கல்வித் தகுதி பெற்றவர்கள், அலுவலக தகுதி பெற்றவர்கள் 2018 மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இராணுவத்திற்குப் பதிவு செய்ய விண்ணப்பிக்க வேண்டும்.

இவர்களுக்கு மாதாந்த சம்பளம், போக்குவரத்து, சீருடைகள், மருத்துவ வசதிகள், விடுதி சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆகியவற்றோடு சேர்த்து வெளிநாட்டில் ஐ.நா. அமைதி காக்கும் பணிகளுக்கு செல்ல சந்தர்ப்பமும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயிலில் தமிழ்ப் பெண்ணிடம் ஊழியர் அடாவடி; நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறார் நாமல்!

யாழ்ப்பாணம் நோக்கி ரயிலில் சென்ற தமிழ் பெண் ஒருவருக்கு மிகவும் ஆபாசமான வார்த்தைகளால் ஏசிய ஊழியருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவிலிருந்து இலங்கை வந்த பெண்ணொருவர், நேற்றுமுன்தினம் காலை ரயிலில் யாழ்ப்பாணம் சென்றபோது, சிங்கள மொழி ஊழியர், அந்தப் பெண்ணை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

அத்துடன், நீங்கள் தமிழ் என்றால் என்னை ஒன்றும் செய்ய முடியாது, பொலிஸாராலும் யாராலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. இங்கு நான்தான் பெரியவன் என்று மிரட்டும் தொனியில் இந்த ஊழியர் அனைவரையும் மிரட்டியுள்ளார்.

இந்த சம்பவம் அனைவர் மத்தியிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன், பலரும் விசனம் வெளியிட்டு வருகின்றனர்.

இதுதொடர்பான காணொலி இணையத்தளங்களில் பரவி வருகிறது.

அந்த வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும், துன்புறுத்தல்கள் மற்றும் இனவெறிக்கு இந்த நாட்டில் இடமில்லை. இவ்வாறான செயல்களில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மீண்டும் இது போல் ஒரு சம்பவம் நடைபெறாமல் இருப்பதற்காக இவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கவனத்திற்கும் ரயில்வே திணைக்களத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளார்.

இதேவேளை, நாமலின் இந்த பதிவிற்கு அனைவரும் வாழ்த்து தெரிவித்ததுடன், தமது தரப்பு ஆதங்கத்தையும் வெளியிட்டு வருகின்றனர்.

## சட்டவிரோத நடடிக்கையில் ஈடுபட்ட குழுவினர் நேற்று மட்டக்குளியில் கைது!

கொழும்பு, மே 09

மட்டக்குளி பிரதேசத்தில் போதைப்பொருள்கள் மற்றும் ஆயுதங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் குழுவொன்றை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மட்டக்குளி சமித்புர பிரதேசத்தில் நேற்றுக் காலை பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது பாதாள கும்பலுடன் போதைப் பொருள் விற்பனையாளர்களும் கைது செய்யப்பட்டனர் எனபொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது இராணுவ சீருடையை ஒத்த இராணுவ சீருடையொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கணவன் — மனைவி சடலமாக மீட்பு மரணத்தில் பொலிஸாருக்கு சந்தேகம்

கொழும்பு, மே 09

குருநாகலை - ரிதிகம, கிரிபத்கல்ல பகுதி வீடொன்றில் இருந்து பொலிஸாரால் நேற்று தம்பதிகள் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்டுள்ள தம்பதிகளது சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்டவர்கள் 34 மற்றும் 29 வயதானவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன எனத் தெரிவித்த பொலிஸார் பல கோணங்களிலும் தங்களது தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 3 வயது சிறுவனை கடித்து தின்ற சிறுத்தை; உகண்டா தேசிய பூங்காவில் கொடூரம்

கம்பாலா, மே 09

தென்னாபிரிக்காவிலுள்ள உகாண்டா தேசிய பூங்காவில் 3 வயது சிறுவனை சிறுத்தை கடித்து தின்ற சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவின் உகாண்டா நாட்டில் உள்ள ராணி எலிசபெத் தேசிய பூங்கா மிகவும் பிரசித்தி பெற்றது. இந்த பூங்காவில் பணிபுரியும் வனத்துறை அதிகாரிகளின் குடும்பங்கள் அங்குள்ள குடியிருப்பில் தங்கியுள்ளன.

அங்கு வேலைப்பார்க்கும் பெண் வனத்துறை அதிகாரியின் 3 வயது மகன் தனது பாட்டியுடன் இருந்தார். விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை தனியே வீட்டினுள் விட்டுவிட்டு பாட்டி வெளியே சென்றுள்ளார். பாட்டியை பின் தொடர்ந்து சென்ற சிறுவன் பாதுகாப்பில்லாத இடத்திற்கு சென்றுவிட்டான். அப்போது திடீரென அங்கு வந்த சிறுத்தை சிறுவனை கடித்து இழுத்துச் சென்றது. சிறுவனின் அழுகுரல் கேட்டு வந்த பாட்டி சிறுத்தை இழுத்துச் செல்வதைக் கண்டார். ஆனால் அவரால் காப்பாற்ற முடியவில்லை.

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கப்பட்டு சிறுவனை



தேடும் பணியில் ஈடுபட்டனர். அடுத்த நாள் சிறுவனின் எலும்புக்கூடு மட்டுமே கிடைத்தது. சிறுத்தை சிறுவனைக் கடித்து தின்ற சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

குடியிருப்பு பகுதியைச் சுற்றி பாதுகாப்பு வேலி போடப்படாமல் இருந்ததே இதற்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், சிறுவனை கொன்ற சிறுத்தையை தேடும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். ஒருமுறை மனிதனை தின்ற சிறுத்தை மிகவும் ஆபத்தானது, அதனைக் கண்டுபிடித்து கூண்டினுள் அடைக்க வேண்டும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சோமாலியாவில் குண்டுத் தாக்கு: கென்ய வீரர்கள் 9 பேர் உயிரிழப்பு



சோமாலியா நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள டோப்லி நகரில் அல் ஷபாப் பயங்கரவாதி நடத்திய குண்டுத் தாக்குதலில் கென்ய படை வீரர்கள் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் நடைபெற்று வரும் ஆட்சியை எதிர்த்து அல் ஷபாப் தீவிரவாதிகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



இங்கு பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் கென்யா, ஜிபோட்டி, உகாண்டா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆபிரிக்க யூனியனைச் சேர்ந்த கூட்டுப்படையினரை குறிவைத்தும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மேலும், வெளிநாட்டினர் அதிகமாக கூடும் பிரபல ஓட்டல்களின் மீது தாக்குதல் நடத்தி, பலரை சுட்டுக் கொன்றும், சிலரை பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்தும் அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சோமாலியா நாட்டின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள டோப்லி நகரில் அல் ஷபாப் பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் கென்ய படைவீரர்கள் 9 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மேலும் பலர் படுகாயம் அடைந்தனர் என கென்ய அரசு தெரிவித்துள்ளது.

# ஆப்கானிஸ்தானில் 5 பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக்கொலை!



காபூல், மே.09

ஆப்கானிஸ்தானில் பயங்கர வாதிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுள்ளது.

பயங்கரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் அதிகாரிகள் 5 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தும் தலிபான் பயங்கரவாதிகள், பொலிஸ், ராணுவ வீரர்கள் மற்றும் அரசு அதிகாரிகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கந்தகார் மாகாணத்தில் பாகிஸ்தான் நாட்டின் எல்லையை ஒட்டி அமைந்துள்ள மரோப் மாவட்டத்தில் பொலிஸார் வாகனங்களில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த பயங்கரவாதிகள் பொலிஸாரின் வாகனங்களைக் குறிவைத்து சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதையடுத்து, பொலிஸாரும் உடனடியாக பதில் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்புக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச்சண்டை இடம்பெற்றுள்ளது. இதன் போது பயங்கரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் அதிகாரிகள் 5 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தனர். மேலும் 9 பொலிஸார் படுகாயம் அடைந்தனர்.

அதேசமயம் பயங்கரவாதிகள் தரப்பில் 15 பேர் பலியாகினர். மேலும் 11 பேர் காயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு தலிபான் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்று உள்ளது.

# செவ்வாய் கிரகத்தில் ஆய்வுக்கு புதிய ரோபோவை அனுப்பியது நாசா

செவ்வாய் கிரகத்தில் ஆய்வு நடத்துவதற்காக 2 செயற்கை கோள்களுடன் 'இன்சைட்' என்ற புதிய ரோபோவை நாசா மையம் அனுப்பியுள்ளது.

செவ்வாய் கிரகத்தில் ஆய்வு மேற்கொள்ள நாசா மையம் ஏற்கனவே ரோவர் என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது. அது செவ்வாய் மீது நகர்ந்து செல்லும் சிறிய வாகனம் ஆகும்.

இது அங்கு சில ஆராய்ச்சிகளை செய்து முடிவுகளை பூமிக்கு அனுப்பி வருகிறது. அதன் வேகம் போதவில்லை. எனவே தற்போது 'இன்



சைட்' என்ற புதிய ரோபோவை செவ்வாய் கிரகத்துக்கு நாசா அனுப்பியுள்ளது.

இது கடந்த சனிக்கிழமை வெற்றிகரமாக ஏவப்பட்டது. அது இன்னும் செவ்வாய் கிரகத்தைச் சென்றடையவில்லை. இந்த 'இன்சைட்' ரோபோவுடன் 2 செயற்கைகோள்கள் பொருத்தப்பட்டுள்ளன.

செவ்வாய்க் கிரகத்தில் இறங்கியவுடன் அங்கு குழி தோண்டி ஆய்வை தொடங்கும். அதே நேரத்தில் செயற்கைகோள்கள் செவ்வாய் கிரகத்தை சுற்றி வரும். இதன்மூலம் ஆராய்ச்சி தகவல்களை உடனுக்குடன் பூமிக்கு அனுப்ப முடியும்.

ரோபோவுக்குள் சிறிய நிலநடுக்க கருவி உள்ளது. அது செவ்வாய் கிரகத்தில் ஏற்படும் நிலநடுக்கத்தை ஆய்வு செய்து அனுப்பும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# லெபனான் நாடாளுமன்றத் தேர்தலில் ஹெஸ்புல்லா இயக்கத்தினர் முன்னிலை

லெபனான் நாடாளுமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில், போராளி இயக்கமான ஹெஸ்புல்லா – அமல் கட்சி கூட்டணி முன்னிலையில் உள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேல், சிரியாவை அண்டை நாடாக கொண்ட லெபானானில் கடைசியாக 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நடந்தது.

அதன்பின்னர், பிராந்திய அரசியல் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இரண்டு முறை நாடாளுமன்றத்திற்கு நீடிப்பு அளிக்கப்பட்டது. இந்த நிலையில், பல ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த 6 ஆம் திகதி தேர்தல் இடம் பெற்றது.

128 இடங்களுக்காக நடந்த வாக்குப்பதிவில் 49 சதவிகித வாக்குகள் பதிவானது. கிறிஸ்தவர்கள் மற்றும் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் லெபனானில், அதிபராக கிறிஸ்தவரும், பிரதமராக சன்னி இஸ்லாமியரும், சபாநாயகராக சன்னி இஸ்லாமியரும் இருக்க வேண்டும் என்பது அரசியல் சட்டம்.

வாக்கு எண்ணிக்கை நிலவரங்கள் முழுவதும் வெளியாகாவிட்டாலும், போராளி இயக்கமான ஹெஸ்புல்லா அதிக இடங்களை கைப்பற்றியுள்ளது என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹெஸ்புல்லா மற்றும் அமல் கட்சி கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தன. ஷியா பிரிவு போராளி இயக்கமான ஹெஸ்புல்லாவுக்கு ஈரானின் ஆதரவு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் இன்று முடிவை அறிவிக்கிறார் ட்ரம்ப்!

ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் தொடர்பான தனது முடிவை இன்று அறிவிப்பேன் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித் துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில், அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆட்சிக் காலத்தில் ஈரானுக்கும் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 6 வல்லரசு நாடுகளுக்கும் இடையே அணுசக்தி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில், அணு சக்தியை ஆக்கபூர்வ பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவோம் என்று ஈரான் உறுதியளித்தது. இதை ஏற்று அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பல்வேறு பொருளாதாரத் தடைகளும் நீக்கப்பட்டன.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர், ஈரானுடனான அணு சக்தி ஒப்பந் தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தத்தை பைத்தியக்காரத்தனமானது என்றும் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்து வந்தார்.

ட்ரம்ப்பின் இந்த விமர்சனத்துக்கு ஈரான் அதிபர் ஹசன் ரவ் ஹானியும் தக்க பதிலடி அளித்து வந்தார். அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகினால் அது அந்த நாட்டின் வரலாற்றுத் தவறாக அமையும் என்று அவர் எச்சரித்தார்.

இந்த நிலையில் ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில், "ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் குறித்த தனது முடிவை நாளை (இன்று) மதியம் 2 மணியளவில் அறிவிக்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார். (க)


# ‘நீட்’ தேர்வை ரத்து செய்யக் கோரி போராட்டம்

## இந்திய மாணவர் சங்கத்தினர் பொலிஸாரால் கைது!

சென்னை, மே 09

‘நீட்’ தேர்வை ரத்து செய்யக் கோரி சென்னையில் உள்ள சி.பி.எஸ். இயக்குநர் அலுவலகத்தை முற்றுகையிடச் சென்ற இந்திய மாணவர் சங்கத்தினரை பொலிஸார் தூக்கிச் சென்று கைது செய்துள்ளனர்.

தமிழகத்தில் ‘நீட்’ தேர்வை நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும், ‘நீட்’ தேர்வு மையங்களில் சோதனை என்ற பெயரில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட அத்துமீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் போராட்டத்தில் ஈடுபடப்போகிறோம் என இந்திய மாணவர் சங்கத்தினர் தெரிவித்திருந்தனர்.



அதன்படி, சென்னை திருமங்கலத்தில் உள்ள சி.பி.எஸ். இயக்குநர் அலுவலகம் அருகே இந்திய மாணவர் சங்க மாநில துணைச் செயலாளர் நிருபன் தலைமையில் சுமார் 50 பேர் நேற்றுமுன்தினம் காலை திரண்டனர்.

அவர்கள் மத்திய, மாநில அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பிபோராட்டத்தில்ஈடுபட்டனர். பின்னர், அனைவரும்சி.பி.எஸ். அலுவலகத்தை முற்றுகையிடச்சென்றனர்.இதுபற்றி தகவல் அறிந்ததும் அங்கு விரைந்த அண்ணா நகர் பொலிஸார், போராட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்தினர். தடையை மீறி முன்னேறிச் செல்ல முயன்றபோது போராட்டக்காரர்களுக்கும்,பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் பொலிஸார் தூக்கிச் சென்று கைது செய்தனர். அருகில்உள்ளதனியார்மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அவர்கள், மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

முன்னதாக பொலிஸாருடன் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவி ஒருவர் காயம் அடைந்தார் என்றும்தெரிவிக்கப்படுகிறது.

# தூசுப் புயல் மீண்டும் தாக்கியது: இருளில் மூழ்கியது தலைநகர் டில்லி!

கடந்த சில தினங்களுக்கு முன்பு வட மாநிலங்களை தாக்கிய தூசுப் புயல் நேற்றுமுன்தினம் இரவு மீண்டும் டில்லியில் தாக்கியுள்ளது. இடி மின்னலுடன் பலத்த மழை பெய்ததால் மின்சாரம் தடைபட்டது. இதனால் நேற்று பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களின் பல பகுதிகளில் சில தினங்களுக்கு முன், கடும் சூறைக்காற்றும், இடி, மின்னலுடன் கூடிய மழையும் பெய்தது. வெறும் சூறைக்காற்றோடு இல்லாமல் மணலையும், தூசியையும் அள்ளிக்கொண்டு வந்து



மக்கள் வாழுமிடங்களில் சேதத்தை ஏற்படுத்தியது.

வீதிகளில் இருந்த மரங்கள் வேரோடு சாய்ந்தன, சில மரங்கள் தூக்கி வீசப்பட்டன. மின் கம்பங்கள் ஏராளமானவை சாய்ந்தமையால், மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது. வீடுகள் பல இடிந்து விழுந்தன. இதனால் சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்றோர், கார், பஸ், லொறி ஆகிய வாகனங்களில் சென்றோர் தொடர்ந்து செல்ல முடியாமல் ஆங்காங்கே நிற்க வேண்டியதாயிற்று. மக்களும் வீட்டை விட்டு வெளியே வர முடியாமல் கடும் சிரமத்துக்குள்ளாகினர்.

பல மாநிலங்களையும் தாக்கிய தூசுப் புயலுக்கு 130 பேர் பலியாகினர். மீண்டும் புயல் தாக்கும் என வானிலை மையம் எச்சரித்து இருந்தது.

# கோட்டையை முற்றுகையிட்டு போராட்டம்



## அரசு ஊழியர், ஆசிரியர்கள் 2,000 பேர் கைது!

சென்னை, மே 09

ஜாக்டோ-ஜியோ அமைப்பு சார்பில் தமிழக தலைமை செயலகத்தை முற்றுகையிட வந்த அரசு ஊழியர், ஆசிரியர்கள் 2 ஆயிரம் பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ அமைப்பு சார்பில் நேற்று தமிழக தலைமை செயலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்பட்டது.

புதியஓய்வூதியத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதியத்தை வழங்க வேண்டும், ஊதிய முரண்பாடுகளைத் தீர்த்து வரையறுக்கப்பட்ட ஊதியத்தை வழங்க வேண்டும், 21 மாத ஊதிய நிலுவை தொகையை ரொக்கமாக வழங்க வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பங்கேற்பதற்காகவே அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் நேற்றுமுன்தினம் மாலையிலேயே அந்தந்த மாவட்டங்களில் திரண்டனர்.

ரயில் மற்றும் பஸ்களில் புறப்பட்டு சென்னை வர திட்டமிட்டனர். இவர்களை பஸ், ரயில் நிலையங்களில் வழிமறித்த பொலிஸார் கைது செய்தனர்.

அதே நேரத்தில் நிர்வாகிகள் பலர் வெளி மாவட்டங்களில் இருந்து ரயில் மற்றும் பஸ்களில் நேற்றுக் காலை சென்னைக்கு வந்தடைந்தனர். இவர்களை எழும்பூர், சென்ட்ரல் ரயில் நிலையங்களில் பொலிஸார் கைது செய்தனர்.

கோயம்பேடு பஸ் நிலையத்தில் வந்து இறங்கிய ஜாக்டோ-ஜியோ அமைப்பினரும் கைதானார்கள். சென்னையில் மட்டும் நேற்றுக் காலை வரையில் 1000 பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

கோயம்பேடு பஸ் நிலையம் அருகே விடுதியில் தங்கியிருந்த ஜாக்டோ-ஜியோ அமைப்பைச் சேர்ந்தவர்களையும் பொலிஸார் தேடிப்பிடித்து கைது செய்தனர்.

தமிழகம் முழுவதும் 2 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் அந்தந்த பகுதிகளில் உள்ள சமூக நலக் கூடங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இதற்கிடையே நேற்றுக் காலை 9.30 மணி அளவில் தலைமை செயலகத்தை முற்றுகையிடுவதற்காக பலத்த பொலிஸ் கெடுபிடியையும் மீறி ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் நூற்றுக்கணக்கானோர் சேப்பாக்கத்தில் திரண்டனர். அவர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

சென்னை பல்கலைக்கழகம் அருகில் திரண்டவர்களும் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனை கண்டித்து அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் வாலாஜா சாலையில் திடீரென மறியலில் ஈடுபட்டனர். அவர்களை வலுக்கட்டாயமாக பொலிஸார் வானில் ஏற்றிச் சென்றனர்.

இதன் காரணமாக சென்னை தலைமை செயலகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டது என்றும் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழக அரசியலில் நானே 3 ஆம் அணி

## விஜயகாந்த் கூறுகிறார்

தமிழக அரசியலில் நான்தான் மூன்றாவது அணி. அது உரிய நேரத்தில் நிரூபித்துக் காட்டப்படும் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் இதுதொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. யாருடனும் கூட்டணி அமைக்காது. அந்த தேர்தலை தே.மு.தி.க. தனித்து சந்திக்கும். புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் தே.மு.தி.க. தன் சொந்த காலில் நிற்கும். இதற்காக நான் இப்போதே தீவிர கவனம் செலுத்தத் தொடங்கி விட்டேன். 2019 நாடாளுமன்ற தேர்தலை சந்திக்க நான் புதிய வியூகம் வைத்துள்ளேன். அதை இப்போதே வெளியிட விரும்பவில்லை.




தமிழ்நாட்டில் தற்போது அரசியல் வெற்றிடம் ஏற்பட்டு இருப்பதாக தேர்தல் நிபுணர்கள் சொல்லிய படி உள்ளனர். என்னைப் பொறுத்தவரை தமிழக அரசியலில் எந்த வெற்றிடமும் இல்லை. அ.தி.மு.க., தி.மு.க., தே.மு.தி.க. கட்சிகள் சுறுசுறுப்பாகவே இயங்கி வருகின்றன.

தமிழக அரசியலில் வலுவான மூன்றாவது அணி அமையுமா? என்று சிலர் கேட்டு வருகிறார்கள். நான் தான் அந்த மூன்றாவது அணி. அது உரிய நேரத்தில் நிரூபித்துக் காட்டப்படும்.

ரஜனியும் கமலும் அரசியலுக்கு வருவது பற்றி இன்னொரு நடிகனான என்னிடம் கேட்காதீர்கள். மக்கள்தான் சிறந்த நடுவர்கள். அவர்கள் எல்லாவற்றையும் தீர்மானிப்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சமூக வலைதளங்களில் விமர்சிக்க வேண்டாம்!

## ரசிகர்களுக்கு ரஜனி அறிவுரை



சமூக வலைத்தளங்களில் மற்ற அரசியல் கட்சிகளை விமர்சிப்பது போன்ற செயல்களில் ரசிகர்கள் யாரும் ஈடுபடக் கூடாது என்று ரஜனிகாந்த் அறிவுறுத்தி உள்ளார்.

அரசியலில் இறங்கி இருக்கும் ரஜனி கட்சி தொடங்குவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளார். அதற்காக மாவட்டம் தோறும் செயல் பட்டு வரும் ரசிகர் மன்றங்களை அரசியல் அமைப்பாக மாற்றவும் எல்லா நிலைகளிலும் மக்கள் மத்தியில் கட்சிக்கு நல்ல இமேஜ் ஏற்படுத்தும் வகையில் பணிகளைச் செய்யும் படியும் மன்ற நிர்வாகிகளுக்கு ரஜனி ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

மக்கள் மத்தியில் சமூக வலைத்தளங்கள் மிக முக்கிய இடத்தை பிடித்துள்ளன. இதில் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மட்டுமில்லாமல் தனிநபர் விமர்சனங்களும் அனல் பறக்கின்றன.

இந்த நிலையில், சமூக ஊடகங்களில் கருத்து வெளியிடுவது, விமர்சனங்களுக்கு எதிராக அறிக்கை விடுவது ஆகியவற்றை தவிர்க்கும்படி ரஜனிகாந்த் கேட்டுக் கொண்டுள்ளார். குறிப்பாக தனிநபர் தாக்குதல், மற்ற கட்சிகளை விமர்சிப்பது போன்ற செயல்களில் ரசிகர்கள் யாரும் ஈடுபடக் கூடாது என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிவிடப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விளக்கமளித்துள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வக் கீச்சகப் பக்கம் 'ஹக்' செய்யப்பட்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ கீச்சகச் செய்திக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வக் கீச்சகப் பக்கம் மோசடியாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தனது கீச்சகத்தில் நாடாளுமன்றில் நேற்று தான் ஆற்றிய கொள்கை விளக்க உரையின் ஒரு பகுதியைப் பதிவிட்டார்.

அந்தப் பதிவுக்குப் பதிலளித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கீச்சகத்தில், 'நீங்கள் சிறந்த பேச்சாளர். ஆனால் உங்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்களை செயலில் காட்டுங்கள்' எனக் கருத்து பதிவிடப்பட்டிருந்தது.

இந்தப் பதிலளிப்புப் பதிவு நேற்று மாலை 5.32 மணிக்கு ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கீச்சகத்தில் பதிவிடப்பட்டது. எனினும் அதனை சில மணித் துளிகளில் 'ஜனாதிபதி ஊடகப் பிரிவு நீக்கியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கீச்சகம் ஹக் செய்யப்பட்டே இந்தக் கருத்து பதிவிடப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# மதுபானச்சாலையில் கைகலப்பு:

## யாழ். சிறைச்சாலைக்குள் சந்தேகநபர் மீது தாக்குதல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணம் சிறைச்சாலை வாகனம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த நபர் மீது சிறைச்சாலைக்குள் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

ரெஸ்ரோரன்ட்டுக்குள் வைத்து சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பொது மகனைத் தாக்கிய ஆதாரம் அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியது. அதனை நீதிமன்றில் வெளிப்படுத்தக் கூடாது என அச்சுறுத்திச் சந்தேகநபர் மீது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனால் சந்தேகநபரின் கண் புருவம் உள்ளிட்ட இடங்களில் காயம் ஏற்பட்டுள்ளது என மருத்துவச் சான்றிதழை முன்வைத்து சந்தேநபரின் சட்டத்தரணி நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலுள்ள ரெஸ்ரோரன்டில் கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சிறைச்சாலை ஜெயிலர் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். அதனால் வாகனம் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சந்தேநபர் சார்பில் அவரது சட்டத்தரணி நகர்த்தல் பத்திரம் அணைத்தமைக்கமைவாக இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றில் கடந்த வாரம் விசாரணைக்கு வந்தது.

சந்தேகநபர் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதியிலுள்ள ரெஸ்ரோரன்டில் மது அருந்திக் கொண்டிருந்தார். அங்கு மது அருந்த வந்த யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மூவருக்கும் சந்தேகநபருக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது.

அதனால் இரு தரப்பும் மேல் மாடியிலிருந்து இறங்கி வந்து வீதிவரை கைகலப்பில் ஈடுபட்டனர். அதன்போதே சிறைச்சாலை வாகனத்தின் கண்ணாடி உடைந்தது.

,சந்தேகநபர் முறைப்பாட்டாளர்களின் பொறுப்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதனால் அவருக்கு அச்சுறுத்தல் உண்டு. எனவே சந்தேநபரைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று சந்தேகநபரின் சட்டத்தரணி அன்றைய தினம் மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

அதனை ஆராய்ந்த மேலதிக நீதிவான், முறைப்பாட்டாளரின் பாதுகாப்பில் சந்தேகநபரைத் தடுத்துவைப்பது அச்சுறுத்தலானது எனச் சுட்டிக்காட்டி அவரைப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமைக்கு திகதியிடப்பட்டது. சந்தேகநபர் தனது சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையானார்.

சந்தேகநபரைச் சிறை அலுவலர்களும் தாக்கியமைக்கான ஆதாரம் ரெஸ்ரோரண்டில் பொருத்தப்பட்ட சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியிருந்தது. அதனைப் பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், தாமும் கைகலப்பில் ஈடுபட்டமைக்கான ஆதாரம் அதில் உள்ளதை அறிந்து, சந்தேகநபரைச் சிறைச்சாலைக்குள் வைத்து தாக்கியுள்ளனர். இந்த விடயத்தை எவரிடமும் தெரிவிக்க வேண்டாம் எனவும் சிறை அலுவலர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

சிறைச்சாலைக்குள் சந்தேகநபர் கொண்டு செல்ல முன்னர் அவரை பரிசோதித்து வழங்கிய மருத்துவச் சான்றிதழில் அவரது உடலில் காயங்கள் உள்ளமை தொடர்பில் தெரிவிக்கப்படவில்லை.

சிறைச்சாலைக்குள் இருந்த போது பரிசோதிக்கப்பட்டு வழங்கப்பட்ட மருத்துவச்சான்றிதழில் சந்தேகநபரின் கண் புருவம் உள்ளிட்ட பகுதிகளில் தாக்கப்பட்டமைக்கான காயங்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சி.சி.ரி.வி. கமரா பதிவைப் பெற்று இந்த தாக்குதலில் சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்று சந்தேகநபரின் சட்டத்தரணி மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

அதனை ஆராய்ந்த நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், ரெஸ்ரோரண்டின் சி.சி.ரி.வி. பதிவு மன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும், அந்தப் பதிவில் உள்ளவாறு தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு மன்றில் முற்படுத்தப்படவேண்டும் என்று பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சிறைச்சாலைக்குள் தாக்கப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர் பொலிஸில் முறைப்பாட்டை வழங்கவேண்டும். அது தொடர்பில் சந்மேகநபரிடம் பொலிஸார் வாக்குமூலத்தைப் பெறவேண்டும் என்றும் நீதிவான் கட்டளையிட்டார்.

வழக்கு விசாரணை ஜூன் 18ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-7)

## சமூர்த்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணில் விக்கிரமசிங்க கட்டளை வழங்கியுள்ளார். அத்துடன், இந்த விடயத்தில் பிரதமர் அலுவலகம் நேரடியாகத் தலையீடு செய்துள்ளது.

அமைச்சு ஒன்றின் மீது தலையீடுசெய்துநிதிமுறைகேடு தொடர்பில் பிரதமர் அலுவலகம் கவனம் செலுத்துவது இதுவே முதன்முறை எனத் தெரியவந்துள்ளது.

சமூக வலுவூட்டல், நலன்புரி அமைச்சராக எஸ்.பி.திசநாயக்க பதவி வகித்தபோது, 12 மாதங்களுக்கான சமூர்த்திக் கொடுப்பனவுக்கு அவரது அமைச்சுக்கு 2500 கோடி ரூபா நிதி வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சமூர்த்திக் கொடுப்பனவுக்காக மாதந்தம் 208 கோடி ரூபா செலவிடப்படும். ஆனால் முதல் 3 மாதங்களில் ஆயிரத்து 300 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 676 கோடி ரூபா நிதி முறைகேடு இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

சமூக வலுவூட்டல், நலன்புரி அமைச்சராகவிருந்த எஸ்.பி. திசநாயக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்தமையை அடுத்து அமைச்சுப் பதவியிலிருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சு.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. அவற் றில் அவர்கள் நேற்று அமர்ந்து கொண்டனர்.

8ஆவது நாடாளுமன்றின் இரண்டாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2.45 மணி தொடக்கம் இடம் பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் 6 பேர் உட்பட 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கூட்டு அரசிலிருந்து விலகிச் செயற்படப் போகிறார்கள் எனக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் தமக்கான ஆசனங்களை எதிரணி வரிசையில் ஒதுக்குமாறு சபாநாயகரிடம் உத்தியோகபூர்வமாகக் கேட்டிருந்தனர். அதற்கமைய அவர்கள் 16 பேருக்கும் எதிரணி வரிசையில் நேற்று அமர்ந்து கொண்டனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதைத் தவிர வேறு வழியில்லை என்று நேற்றிரவு குறிப்பிட்டார் கூட்டமைப்பின் முக்கிய தலைவரான எம்.பி. ஒருவர்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை காணும் நல்லெண்ணத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து ஜனாதிபதியாக்குவதற்கும், தேசிய நல்லாட்சி அரசு அமைப்பதற்கும் தமிழ்க் கூட்டமைப்பு முழு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கியது. இந்த முயற்சிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவைத் திரட்டியும் கொடுத்தது.

ஆனால், 'கரைசேரும் வரை அண்ணன் – தம்பி; அதன் பின்னர் நீ யாரோ, நான் யாரோ!' – என்ற பாணியில் செயற்பட்ட தென்னிலங்கைத் தரப்புகள் இப்போது, இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியைக் கிடப்பில் போட்டு விட்டன.

2016 இற்குள் தீர்வு என்ற சம்பந்தன், இப்போது 2017 போய் 2018 இலும் அரைவருடம் முடியும் போது விட்டத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமது நல்லாட்சி அரசின் கொள்கை விளக்கவுரையில் காத்திரமான கருத்துக்களை – தமது திட்டங்களை – ஜனாதிபதி வெளியிடுவார் எனத் தமிழர் தரப்பில் மிகுந்த எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் தமிழர் தரப்பின் அந்த நம்பிக்கை புஸ்வாணமாகிப் போய் விட்டது. வழமை போல தமது 'சளாப்பல்' கதைகளைக் கூறி கொள்கை விளக்கப் பேச்சை ஒப்பேற்றி கொண்டார் ஜனாதிபதி மைத்திரி.

ஏற்கனவே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தங்களது உறுதிப்பாட்டை – திடசங்கற்பத்தை – இந்தக் காலத்தில் அரசும் ஜனாதிபதியும், பிரதமரும் வெளிப்படுத்த வேண்டும் , இல்லையேல் அரசநிர்வாக முடக்கப் போராட்டத்தை ஆரம்பிப்போம் என தலைவர் சம்பந்தரின் தளபதியாரான சுமந்திரன் முன்னெச்சரிக்கை அறிவிப்பு விடுத்திருந்தார்.

இந்தப் பின்புலத்தின் ஜனாதிபதியின் நேற்றைய உரை தமிழ்த் தலைமைகளைப் பொறுத்தவரை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய நடவடிக்கை போன்று அமைந்துள்ளது என்கின்றன கூட்டமைப்பு உள்வீட்டு வட்டாரங்கள்.

சம்பந்தன், மாவை, சுமந்திரன், சித்தார்த்தன், செல்வம் போன்ற கூட்டமைப்புத் தலைவர்கள் அனைவரையுமே ஜனாதிபதியின் உப்புச் சப்பற்ற – இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தெளிவான கருத்துகள் ஏதுமற்ற – பூசிய மொழுகிய – அலங்கார வர்ணப் பேச்சு அதிருப்தியில் ஆழ்த்தியிருப்பதாக அறிய முடிகின்றது.

இந்த உரை மீதான விவாதம் நாளை நடக்கும்போது கூட்டமைப்புத் தலைவர்களின் எரிச்சல் – ஆத்திரம் – விசனம் – அதிருப்தி – அனைத்துமே அங்கு பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கலாம்.

- மின்னல் -

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியினால் முடக்கப்பட்ட நாடாளுமன்றம் ஜனாதிபதியின் உத்தரவுப்படி நேற்றுப் பிற்பகல் மீண்டும் சம்பிரதாயபூவமாகக் கூடியது. முப்படையினரின் அணிவகுப்புடன் வருகை தந்த ஜனாதிபதியை சபாநாயகர் கரு ஜெயசூரிய வரவேற்றுக் கூட்டிச் சென்றார்.

நேற்று சபையில் ஜனாதிபதி தமது அரசின் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்தினார்.

அந்த நீண்ட உரையில் ஓரிரு இடங்களில் மட்டும் தமிழரின் பிரச்சினை குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

நிறைவேற்றப்பட வேண்டிய பதினைந்து திட்டங்கள் என்று அறிவித்த ஜனாதிபதி அவற்றில் 'சம உரிமைகளுக்கான தமிழரின் அபிலாஷைகளை உறுதி செய்தல்' என்பதையும் ஒன்றாகக் குறிப்பிட்டார்.

"நிலையான நாட்டின் அடித்தளம் தேசிய நல்லிணக்கமே ஆகும். உண்மையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்மானங்களை இயற்றத்தக்க கட்டமைப்பினை அறிமுகப்படுத்த வேண்டும். அந்த நோக்கை வெற்றி கொள்வதற்கு தற்போது செயலில் இருந்துவரும் மாகாண சபை முறைமையை மேலும் பலப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என நான் நம்புகிறேன்.


"எவ்வாறான விமர்சனங்கள் எழுந்த போதிலும் வடக்கு, கிழக்கு மக்களின் பொறுமையிழப்பினை நிரந்தரமாக சமரசப்படுத்த வேண்டுமாயின் மக்களின் விருப்பத்தையும் இணக்கப்பாட்டையும் பெற்ற அரசியல் வேலைத்திட்டமொன்றினை ஆரம்பித்தல் வேண்டும். பௌதீக ரீதியில் நாம் பயங்கரவாதிகளை தோற்கடித்த போதிலும் அவர்களின் கொள்கையினை முழுமையாக தோல்வியுறச் செய்வதற்கு இன்னும் முடியாது போயிருக்கின்றது."

–என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் தமது உபாயம், திட்டம், எதிர்பார்ப்பு, யோசனை ஆகியவை தொடர்பில் இதற்கு அப்பால் அவர் வேறு எதனையும் தெரிவிக்கவே இல்லை. (உ)

காலைக்கதிர்
Kalaikkathir


# உலக அணியில் மக்லெனகன், றொங்கி




மேற்கிந்தியத் தீவுகளில். மரியா. இர்மா புயல்களால் பாதிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் மைதானங்களைப் புனரமைப்பதற்கான நிதி சேகரிப்பு 20/20 சர்வதேசப் போட்டியில் விளையாடும் உலக அணியில் நியூசிலாந்தின் மிற்சல் மக்லெனகன், லூக் றொங்கி ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

இவர்களோடு, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஒய்ன் மோர்கனைத் தலைவராகக் கொண்ட தமிம் இக்பால், கிப் அல் ஹஸன், கிட் அப்ரிடி, ஷொய்ப் மலிக், தினேஷ் கார்த்திக், திஸர பெரேரா, ரஷீட் கான் ஆகியோரை உள்ளடக்கிய உலக அணி லோர்ட்ஸில் இம்மாதம் 31ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகளை எதிர் கொள்கிறது.

# பெங்களூரை வீழ்த்தித் தகுதிகாண் சுற்றுக்கு நுழைந்தது ஹைதராபாத்

ரோயல் செலேஞ்சர்ஸ் பெங்களூர் அணியை வீழ்த்தித் தகுதிகாண் சுற்றுக்கு சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி முன்னேறியுள்ளது.

நேற்றுமுன்தினம்நடைபெற்ற39ஆவது லீக் போட்டியில் ஹைதராபாத்தில் சன்ரைசர்ஸ் எதிர் ரோயல் செலேஞ்சர்ஸ் அணிகளுக்கிடையில்பலப்பரீட்சை இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய களமிறங்கியஹைதராபாத் 20 ஓவர்களுக்கு 146 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் வில்லியம்சன் 56 ஓட்டங்களையும், ஷாகிப் அல்ஹசன் 35 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

தற்போதைய ஐ.பி.எல். தொடரைப் பொறுத்தவரையிலும் இலகுவாக எட்டக் கூடிய 147 என்ற இலக்கை நோக்கி பெங்களூர் அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. எனினும், ஹைதராபாத்தின் சிறப்பான பந்துவீச்சால் பெங்களூர் அணி நிலை தடுமாறியது.

ஆரம்பம்முதல் இறுதிவரை அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து அரங்கம் திரும்பியவீரர்களால் அந்த அணி 141 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் கோஹ்லி 39 ஓட்டங்களையும், கிராண்ட்ஹோம் 33 ஓட்டங்களையும் அந்த அணிக்காக அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து அடுத்த தகுதிகாண் சுற்றுக்குத் தெரிவான முதல் அணியாக சன்ரைசர்ஸ் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹார்திக் பாண்டியா முதலிடம்



இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்களுக்கான பட்டியலில் மும்பை அணியின் ஹார்திக் பாண்ட்யா முதலிடத்தில் உள்ளார்.

இந்தியாவில் இந்தாண்டு நடைபெற்று வரும் ஐபிஎல் தொடரில் நேற்று முன் தினம் கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியின்போது மும்பை இந்தியன்ஸ் அணியின் வீரர் ஹார்திக் பாண்ட்யா 2 விக்கெட்டுகள் விழ்த்தியதன் மூலம் 9 போட்டிகளில் 14 விக்கெட்டுகள் என முதலிடம் பிடித்து நாவல் தொப்பியைக் கைப்பற்றியுள்ளார்.

இவருக்கு அடுத்தபடியாக மும்பை இந்தியன்ஸ் வீரர் மார்கண்டே 10 போட்டிகளில் 13 விக்கெட்டுகள் வீழ்த்தி இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இந்த ஆண்டுக்கான அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்களுக்கான பட்டியலில் முதல் பத்து இடங்களில் சென்னை அணி வீரர்கள் எவரும் இல்லை.

வேகப்பந்து வீச்சாளரான சாருத் தாகூர் 7 போட்டிகளில் 8 விக்கெட்டுகள் வீழ்த்தி 16ஆவது இடத்தை பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பார்சிலோனா - மட்ரிட் ஆட்டம் சமநிலையில்



ஸ்பானியக் உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், பார்சிலோனா, றியல் மட்ரிட் அணிகளுக்கிடையே இலங்கை நேரப்படி நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்ற எல் கிளாசிகோ என்றழைக்கப்படும் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

தமது மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில், சேர்ஜி றொபேர்ட்டோ கொடுத்த பந்தை லூயிஸ் சுவாரஸ் போட்டியின் 10ஆவது நிமிடத்தில் கோலாக்க போட்டியின் ஆரம்பத்திலேயே பார்சிலோனா முன்னிலை பெற்றது. எனினும் அடுத்த நான்காவது நிமிடத்தில் கரிம் பென்ஸீமா தலையால் முட்டிக் கொடுத்த பந்தை கோலாக்கிய கிறிஸ்டியானோ றொனால்டோ கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தினார்.

இந்நிலையில், முதற்பாதி முடிவடையும் தருணத்தில் றியல் மட்ரிட்டின் மார்ஷெலோவைத் தள்ளி வீழ்த்திய சேர்ஜி றொபேர்ட்டோ நேரடியாக சிவப்பு அட்டை காட்டப்பெற்று மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அந்தவகையில் 1-1 என்ற கோல் கணக்கில் முதற்பாதி சமநிலையில் முடிவடைந்ததுடன், முதற்பாதியுடன் கோல் பெறும்போது கணுக்காலில் உபாதைக்குள்ளாகிய கிறிஸ்ரியானோ றொனால்டோ மார்கோஸ் அஸென்ஸியோவால் பிரதியீடு செய்யப்பட்டிருந்தார்.

இரண்டாவது பாதி ஆரம்பித்த ஏழாவது நிமிடத்தில், றியல் மட்ரிட்டின் ரபேல் வரானேயிடமிருந்து பறித்து லூயிஸ் சுவாரஸ் கொடுத்த பந்தை லயனல் மெஸ்ஸி கோலாக்க பார்சிலோனா முன்னிலை பெற்றது.

இந்நிலையில், அன்ரே இனியஸ்டாவின் கணுக்காலைத் தாக்கியதுடன் சாமுவேல் உம்டிட்டியுடன் மோதியபோதும் மஞ்சள் அட்டை காட்டப் பெறாமல் தப்பித்திருந்த கரித் பேல், மாற்று வீரராகக் களமிறங்கிய நெல்சன் செமிடோவை வீழ்த்தியபோது மஞ்சள் அட்டை காட்டப் பெற்றிருந்தார். மறுபக்கம் மார்ஷெலோவை ஜோர்டி அல்பா வீழ்த்தியபோது றியல் மட்ரிட்டுக்கு பெனால்டி வழங்கப்படவில்லை. இச்சந்தர்ப்பத்தில், போட்டியின் 72ஆவது நிமிடத்தில் கரித் பேல் பெற்ற கோலோடு இறுதியில் 2-2 என்ற கோல் கணக்கில் போட்டியை றியல் மட்ரிட் சமநிலையில் முடித்துக் கொண்டது.

# மனவேதனையில் விராட் கோஹ்லி

நாங்கள் வெளியேற்றப்பட்டுவிட்டோம், இந்த தொடரில் எங்களின் கதை முடிந்து விட்டது என பெங்களூர் அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

11 ஆவது ஐ.பி.எல் தொடரில் 7 ஆவது தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து அந்த அணி தொடரில் இருந்து வெளியேறியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.


ஹைதராபாத் அணியுடன் தோற்று விட்டோம். இந்தத் தோல்விக்குத் நாம் தகுதியானவர்களா என்பதும் தெரியவில்லை எனச் சுட்டிக்காட்டிய கோஹ்லிஎமதுமுழுத்திறமை யையும் வெளிப்படுத்தவில்லை எனவும் கூறியுள்ளார்.

ஹைதராபாத் அணி யினர் சிறப்பாக பந்து வீசினார்கள். அந்த நெருக்கடி எமது தோல்விக்குக் காரணம் எனவும், 10 - 15 ஓட்டங்கள் குறைவாக விட்டுக்கொடுத்திருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம்எனவும்கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர் பார்க்கப்பட்ட ஓர் அணியாக காணப்பட்ட இந்திய அணித் தலைவர் விராட் கோர்ஹ்லி தலைமைத்துவம் ஏற்ற பெங்களூர் அணி நடைபெற்று கொண்டிருக்கும் ஐ.பி.எல் தொடரில் தொடர்ந்தும் தோல்விகளைச் சந்தித்து தகுதிகாண் சுற்றுக்கு தகுதி பெறாமல்வெளியேறியுள்ளமை ரசிகர்களிடம் அதிருப்தியையும், விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.



## நேற்று நாடாளுமன்றின் விசேட அமர்வை ஒட்டிய நிகழ்வு







## பட்டதாரிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்





'தொழில் உரிமையாகும்' - என்ற தொனிப்பொருளில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்துப் பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்குமாறு கோரி தமிழ் மற்றும் சிங்கள மொழியில் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் ஆர்ப்பாடடத்தில் ஈடுபட்டனர்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு: பல்கலை மாணவருடன் ஒத்துழையுங்கள்!

## பொது அமைப்புகள் சார்பில் நேற்றுக் கோரிக்கை




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்தும் பொறுப்பை இந்த ஆண்டு பல்கலைக்கழக மாணவர்களிடம் வழங்க வடமாகாணசபை இணங்கவேண்டும் என இரு பொது அமைப்புக்கள் கூட்டாகச் சேர்ந்து கோரிக்கை விடுத்துள்ளமையுடன், அரசியல் சாயம் இல்லாமல் பல்கலைக்கழக மாணவர்களால் மட்டுமே நினைவேந்தலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க முடியும் எனவும் கூறியிருக்கின்றன.

நேற்றுக் காலை யாழ்.ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அகில உலக சைவத் திருச்சபை மற்றும் வடபிராந்திய இணைந்த தொழிற்சங்கங்களின் சம்மேளனம் ஆகியன சேர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்நடத்தும்பொறுப்பை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தன.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் அகில உலக சைவத் திருச்சபைத் தலைவர் பாலகுமார குரு மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய இணைந்த தொழிற்சங்கச் செயலாளர் அருளானந்தம் அருள் பிரகாஸ் ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முள்ளிவாய்க்கால் மண்ணில் 2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் படுகொலைசெய்யப்பட்ட மக்களுடைய நினைவேந்தல் கடந்த 3 வருடங்களாக வடமாகாணசபையினால் நடத்தப்பட்டது. அதேபோல் பொது அமைப்புக்கள் மற்றும் கட்சிகளாலும் நினைவேந்தல் நடத்தப்பட்டது. இந்நிலையில் இந்த ஆண்டுமுள்ளிவாய்க்கால்நினைவேந்தல் சகல தரப்புக்களையும் ஒன்றிணைத்து நடத்தப்படவேண்டும் எனப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பாக நேற்று முன்தினம் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் கலந்து கொண்டு தமது கோரிக்கையை அவர்கள் முன்வைத்திருந்தனர்.

ஆயினும் வழக்கம்போல் வடமாகாணசபையே நினைவேந்தலை நடத்தும் என முதலமைச்சர் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். அரசியல் சாயம் இல்லாமல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நடத்தப்படவேண்டும். ஆகவே நினைவேந்தல் நடத்தும் பொறுப்பை மாணவர்களிடம் கையளிக்க வேண்டும் என பல பொது அமைப்புக்கள் கோரி வருகின்றன. இந்நிலையில் அகில உலக சைவ திருச்சபை மற்றும் வடபிராந்திய இணைந்த தொழிற்சங்கங்களின் சம்மேளனம் ஆகியனவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்தும் பொறுப்பை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் வழங்கவேண்டும் என சேர்ந்து கோரிக்கை விடுக்கின்றன.

முள்ளிவாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுடைய படு கொலைகளுக்குப் பிராயச்சித்தம் தேடும் வகையில் உண்மையாகவும், உணர்வுபூர்வமாகவும் நினைவேந்தலை நடத்துவதற்கு பல்கலைக்கழக மாணவர்களால் மட்டுமே இயலும். இதற்குள் அரசியல் தலையீடுகள் இருப்பது அழகல்ல. ஆகவே வடமாகாண சபை இந்த ஆண்டு நினைவேந்தல் நடத்தும் பொறுப்பை மாணவர்களிடம் வழங்கவேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நடக்கவேண்டிய ஒன்றாகும். அதனை முள்ளிவாய்க்கால் மண்ணில் போருக்குள் இருந்தவர்களால் மட்டுமே அறிய முடியும். முள்ளிவாய்க்கால் மண்ணில் இறுதிப் போருக்குள் வாழ்ந்தவர்கள் நாங்கள். அழியாத வடுக்களுடன் வாழ்பவர்கள் நாங்கள். இவ்வாறான வடுக்களுடன் மாகாணசபை உறுப்பினர்கள் வாழவில்லை. படுகொலை செய்யப்பட்ட மக்களுடையநினைவாகஒரு நினைவுத் தூபியை அமைக்க இதுவரை முடியாதவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அரசியல் இலாபம் தேடக்கூடாது. - என்றார்.

## யாழ். முஸ்லிம் பிரதிநிதிகள் முதலமைச்சருடன் சந்திப்பு



வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் நேற்றுச் சந்தித்தனர். இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை தொடர்பாகவும், அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் அவர்கள் கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது. சந்திப்பில் யாழ்.- கிளிநொச்சி ஜம்மியத்துல் உலமா சபை கிளைத் தலைவர் மற்றும் யாழ். மாவட்ட முஸ்லிம் அமைப்புக்கள், பள்ளிவாசல் போன்றவற்றின் நிர்வாகிகள், மாநகர சபை உறுப்பினர் நிபாஹீர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது வடக்கு மாகாண முதலமைச்சரிடம் அவர்கள் மனு ஒன்றையும் கையளித்தனர்.


## ஆதார வைத்தியசாலை – தெல்லிப்பழை நோயாளர் நலன்புரிச் சங்கம்

### பொதுக் கூட்டமும் – புதிய நிர்வாகத் தெரிவும்

நாள்: 13.05.2018 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: பிற்பகல் 3.30 மணி

தலைமை: Dr.யோ.திவாகர் (வைத்திய அத்தியட்சகர்)

இடம்: வைத்தியசாலை கேட்போர் கூடம்

குறிப்பு:- சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்கள், வைத்தியசாலை மீது அக்கறையுள்ள புதிதாக இணைய விரும்புபவர்கள் அனைவரும் கலந்து தங்களின் மேலான ஆலோசனைகளை வழங்குமாறு வேண்டுகின்றேன்.

லயன் சி.ஹரிகரன்
செயலாளர்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ ஊராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தபாராதி 6728 கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.